விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை (01.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 348

## வடக்குக்கு சிவப்பு எச்சரிக்கை தாழமுக்கம் புயலாக மாறலாம்

### மூன்று நாட்கள் கனமழை பெய்யும்



(யாழ்ப்பாணம்)
வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் வலு வடைந்துள்ளதால் வடக்கு உள்ளிட்ட 5 மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.
இன்று முதல் அடுத்த மூன்று நாட்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதிலும் கன மழைக்கு வாய்ப் புண்டு. 19

பாடசாலை கழுத்துப் பட்டியை

## விளையாட்டாக சுருக்கிட்டதில் 9 வயது மாணவி உயிரிழப்பு



புலோலி சாரையடியில் சோகம்

(கரணவாய்)
யன்னல் கதவின் பிணைச்சலில் பாடசாலை கழுத்துப் பட்டியை கட்டி 19

## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### உடுப்பிட்டி வடக்கில் சம்பவம்

(கரணவாய்)
நாக பாம்பினைக் கையால் பிடித்த குடும்பஸ்தர் ஒருவர் பாம்பு தீண்டி 19

## யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக கொரோனா ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட 72 பேருக்கான கொரோனா பரிசோதனை முடிவு 19

## நாகர்கோவிலில் ஒருவருக்கு வாள்வெட்டு

(கரணவாய்)
நாகர்கோவிலில் தலையில் வாள்வெட்டுக்கு இலக்கான ஒருவர் 19

கே.கே.எஸ் கடலில்

## காணாமல்போன மற்றவரும் சடலமாக மீட்பு

### 10 நாட்களுக்கு முன்னரே திருமணமானவர்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை கடலில் நீராடச் சென்றபோது அலையில் அடித்துச் 19

## சகோதரர்கள் மோதல் ஒருவர் உயிரிழப்பு

### முல்லேரியாவில் சம்பவம்

04ஆம் பக்கம் பார்க்க

## ஆபத்து வலயமாக அக்கரைப்பற்று பிரகடனம்

(கொழும்பு)
உடனடி நடைமுறைக்கு வரும் வகையில் கோவிட்-19 அதி ஆபத்து வலய மாக அக்கரைப்பற்று 19

காரைநகர் முருகன் ஆலயத்தில்

## சொக்கப்பனை எரித்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் முருகன் ஆலயத் தில் சொக்கப்பனை எரித்தவர்கள் மற்றும் முருகன் ஆலயமும் தனி மைப்படுத்தப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் 19

## காணாமல்போன இளைஞன்

### கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் மீட்பு

(கரணவாய்)
யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பகுதியில் இரு நாட்களுக்கு முன் காணாமல் போயிருந்த இளைஞர் கை. கால்கள் 19

# மஹர சிறைக் கலவரத்தில் காயமடைந்த 26 கைதிகளுக்கு கொரோனா

- சிறைக் கலவரத்தின் உயிரிழப்பு 08 ஆக உயர்வு.
- 70 பேருக்க மேல் படுகாயம்.
- களேபரத்தை ஆராய 5 பேர் கொண்ட குழு நியமனம்.
- சிறைச்சாலை சம்பவத்தின் உண்மைகள் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் என ஐ.நா சபை வலியுறுத்து.
- சிறைச்சாலையில் நேற்றும் துப்பாக்கிப் பிரயோகம்.

மஹர சிறைச்சாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தால் பலத்த காயங்களுடன் ராகம பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 26 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக ராகம பொது மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு சிறைச்சாலையின் பிரதான வாயிலை உடைக்க முயன்றபோது 70 கைதிகளுக்கு மேல் காயமடைந்துள்ளனர், அவர்களில் 8 பேர் சிறை அதிகாரிகளால் சுட்டுக் கொலலபட்டனர். *இது தொடர்பாக முன்னர் வந்த செய்திகள் உள்ளே* (ப-3)

இரு தினங்களில்

## சாதாரண தர பரீட்சை தொடர்பில் தீர்மானம்

(கொழும்பு)
2020ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை தொடர்பில் இறுதி 19

## வடக்கு மாகாணத்தில் 27 கொரோனா தொற்றாளர்கள்

### நவம்பர் மாதத்தில் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தில் நவம்பர் மாதத்தில் நேற்று வரையான காலப் பகுதியில் 27 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப் பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ் 19

உடல் வலியால்

## 13 வயது சிறுவன் உயிரிழப்பு

### திருமலையில் சம்பவம்

04ஆம் பக்கம் பார்க்க

## கொரோனா பலி 118 ஆக உயர்வு

### நேற்றும் இருவர் உயிரிழப்பு + 492 பேருக்கு தொற்று

19ஆம் பக்கம் பார்க்க

## இந்து பௌத்த கலாசார பேரவையினால் கற்பிக்கப்படுகின்ற 2 ஆம் மொழி கற்கை நெறியினை கற்கும் மாணவர்களிற்கான விசேட அறிவித்தல்

2021ஆம் ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் கீழ்க்காணும் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன. Covid 19 காரணமாக அரச பாடசாலைகளில் சுகாதார கட்டுப்பாடுகள் இருப்பதனால் ஒருசில வாரங்கள் தாமதமாகி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

G.C.E A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கும் விசேடமாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட இருப்பதனால் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மற்றும் சிங்கள மொழியை கற்க விரும்பும் ஆர்வலர்கள் அனைவரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அரச பாடசாலைகளில் இலவசமாக கற்க முடியும்.

மேலும் இந்து பௌத்த கலாசார பேரவையினால் அரச பாடசாலைகள் அல்லாத தனியார் கட்டடங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், ஆரியகுளம், உயர் கலைக் கல்லூரி கட்டடத்தில் விசேட மொழியியல் வகுப்புக்களும் நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்ள விரும்புவர்களுக்கு சுகாதார விதிமுறைகளை பின்பற்றி வகுப்புக்கள் தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலுமுள்ள தகுதியுடைய இளைஞர், யுவதிகள் விரைவாக விண்ணப்பிக்கவும்.

### National Second Language Centers
### Northern Province

**JAFFNA DISTRICT**
Kokuvil Hindu College, Kopay Christian College, Puttur Somaskantha College, Sandilippay Central College, Nelliady Central College, Maruthanarmadam Ramanathan College, Chavakachcheri Drieberg College.

**KILLINOCHCHI DISTRICT**
Murasumoddai Muruganantha college, Tharmapuram Central College, Paranthan Public Viewing Hall, Mulankavil Maha Vidiyalayam, Poonakary Central College.

**MULLAITIVU DISTRICT**
Mu/Mullaitivu Maha Vidyalayam, Mu/ Vidyananda College.

**MANNAR DISTRICT**
Adampan Mathiya Maha Vidyalayam, Mn/st.xavier's boys College.

**VAVUNIYA DISTRICT**
Thandikulam Piramandu Maha Vidyalayam.

**இதில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

**இந்து பௌத்த கலாசார பேரவை,**
**உயர் கலைக் கல்லூரி,**
ஆரியகுளம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம். T.P – 077 271 1181

(C-810)

## நடேஸ்வர அன்னையின் கண்ணீர் காணிக்கை



மலர்வு 25.11.2002

உதிர்வு 29.11.2020

அமரர்
### சிவச்சந்திரன் சிவநிரோஜன்

**ஆழ்கடலால் ஆழ்துயரில் ஆழ்த்தியவனே**
**பள்ளிவந்து இரு வருடங்களுக்குள்ளே**
**கல்வியிலும் இணைதுறையிலும் கேடயம் வென்றாய்**
**ஆசான்களாலும் மாணவர்களாலும் அரவணைத்த முத்தே**
**காலனுக்கும் உன்மேல் ஈர்ப்பு வந்ததோ!**

எமது கல்லூரியின் 2021ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு மாணவன் 29.11.2020 அன்று காலமான செய்திகேட்டு மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு துயரில் நாமும் கலந்துகொள்கின்றோம்.

(4806)

**பாடசாலைச் சமூகம்**
**யா/நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை.**

## கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

### தனியார் வகுப்புகளுக்கு தடை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று தொடக்கம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் வகுப்புகளுக்கு தொடர்ந்து தடை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வாரம் சமூக தொற்று உடைய கொரோனா தொற்றாளர் ஒருவர் இனங் காணப்பட்டதை யடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் பாடசாலைகள் ஒரு வாரம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய தினம் பாடசாலைகள் மீளதிறப்பது தொடர்பாகவும் கொரோனா நிலைவரம் தொடர்பாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் எதிர்வரும் ஜனவரி மாதம் க.பொ.த சாதரண பரீட்சை நடைபெறும் சாத்தியம் உள்ள நிலையில் க.பொ.த சாதாரண பரீட் சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

பல்வேறு சுகாதார விதிமுறைகளை பின்பற்றி க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை இன்றைய தினம் ஆரம்பிக்கும்படி அனைத்து பாடசாலைகளுக்கும் தகவல் வழங்கியுள்ளதாகவும் அதே வேளை தனியார் வகுப்புகள் எதையும் மீள் அறிவித்தல் வரும் வரை நடத்த கூடாது என மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரி வித்தார்.

அத்துடன் ஏனைய வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிப்பது தொடர்பாக எதிர்வரும் 7ஆம் திகதி வரும் பி.சி.ஆர் பரிசோதனையை தொடர் ந்தே முடிவு எட்டப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03, 350)

## வேலணை பிரதேச சபை 2021 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 01.12.2020 முதல் 14.12.2020 மதியம் 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 15.12.2020 பிப 1.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :- 15.12.2020 பி.ப 1.30 மணி

| தொ இல. | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | 2021 ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | --------- | 2,000.00 | 5,000.00 | 18,000.00 |
| 2 | சரவணை மீன் சந்தை | --------- | 2,000.00 | 5,000.00 | 8,000.00 |
| 3 | நயினாதீவு மீன், மரக்கறிச் சந்தை | --------- | 2,000.00 | 5,000.00 | 30,500.00 |
| 4 | மண்டைதீவு வாராந்த சந்தை | --------- | 2,000.00 | 5,000.00 | 10,600.00 |
| 5 | சாட்டி வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலா மையம் (படகு சேவை தவிர்த்து) | ------ | 2,000.00 | 10,000.00 | 310,000.00 |
| | **வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும்** | | | | |
| 6 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதியகட்டடம்) | --------- | 2,000.00 | 10,000.00 | 200,000.00 |
| 7 | கடை இல-5 கோழிக்கடை | 1,000.00 | 2,000.00 | 5,000.00 | 34,000.00 |
| | **வேலணை பொதுச் சந்தை (6ஆம் வட்டாரம்)** | | | | |
| 8 | மீன், மரக்கறி சந்தை | ------------ | 2,000.00 | 5,000.00 | 27,500.00 |
| 9 | சிற்றுண்டிச்சாலை | 1,750.00 | 2,000.00 | 10,000.00 | 27,600.00 |
| 10 | கோழிக் கடை | 750.00 | 2,000.00 | 10,000.00 | 230,000.00 |
| | **புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும்** | | | | |
| 11 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600.00 | 2,000.00 | 5,000.00 | 14,100.00 |
| 12 | புங்குடுதீவு முற்றவெளி மீன், மரக்கறிச் சந்தை | ----- | 2,000.00 | 5,000.00 | 30,500.00 |
| | **நயினாதீவு சந்தை கடைத்தொகுதி** | | | | |
| 13 | கடை இல 01 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 14 | கடை இல 02 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 15 | கடை இல 03 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 16 | கடை இல 04 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 17 | கடை இல 05 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 18 | கடை இல 06 | 1,100.00 | 2,000.00 | 11,000.00 | 132,000.00 |
| 19 | கடை இல 07 | 1,100.00 | 2,000.00 | 11,000.00 | 132,000.00 |
| 20 | கடை இல 08 | 900.00 | 2,000.00 | 9,000.00 | 108,000.00 |

இது தொடர்பான நிபந்தனைகள் 06.11.2020 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளிவந்த வலம்புரி, உதயன் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளே பொருந்தும். மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் அலுவலக நாட்களில் பார்வையிடலாம்.

**திரு. ந. கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

(C-808)

## யா/வைத்தீஸ்வரா கல்லூரி தரம் - 6 இற்கான அனுமதி

யா/ வைத்தீஸ்வரா கல்லூரியில் 2021 ஆம் கல்வி ஆண்டிற்கு தரம் 6இல் புதிதாக மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்பும் பிள்ளைகளின் பெற்றோர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து 14.12.2020 மு.ப 10.00 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (ஏனைய தரங்களுக்கான அனுமதி விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.)

குறிப்பு :- பழைய மாணவர் சங்கம் கனடாக் கிளை தமது 18 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புதிதாக இணையும் மாணவர்களுக்கு பின்வரும் சலுகைகளை வழங்க முன் வந்துள்ளார்கள்.

1. கற்றல் உபகரணங்கள்
2. சப்பாத்து, காலுறை, புத்தகப் பை
3. மேலதிகமாக ஒரு சீருடை
4. வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றலுக்கான அனுசரணை.

அதிபர்,
யா/ வைத்தீஸ்வரா கல்லூரி.

(C-809)

## மகர சிறைச்சாலை முன் குவிக்கப்பட்ட அதிரடிப்படையினர்

# கைதிகளின் உறவுகள் ஒன்றுதிரண்டதால் பதற்றம்



(கொழும்பு)
மகர சிறைச்சாலைக்கு முன்னால் கைதிகளின் உறவினர்கள் ஒன்றுதிரண்டமையால் அங்கு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

சிறைச்சாலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் வன்முறை காரணமாக இது வரை 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 70 கைதிகள் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் உறவினர்கள் ஒன்றுகூடியதில் குறித்த குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்கள் உறவினர்களின் நிலை தொடர்பில் அறிந்து கொள்ள ஒன்றுகூடியவர்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


# முகக் கவசங்களுக்கு கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)
முகக்கவசங்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒளடத உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரோஹித்த உடுமாவல தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, சேர்ஜிக்கல் முகக் கவசங்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் முகக் கவசங்களை இறக்குமதி செய்வதை குறைக்கவும் இது தொடர்பில் உள்நாட்டு உற்பத்தியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக குறிப்பிட்ட அவர், உள்நாட்டு ஒளடத உற்



பத்தியை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# கொரோனா பரவல் குறைவடைய அதிக வாய்ப்புகள் உள்ளன

## நம்பிக்கையூட்டும் சுதத் சமரவீர

(கொழும்பு)
நாடு எதிர்கொண்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் சில பகுதிகள் பகுதியளவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது சில பகுதிகளில் தனிமைப்படுத்தல் நிலைமை தளர்த்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் கோவிட்-19 பரவல் எதிர்வரும் காலங்களில் குறைவடையலாம் என தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த விடயத்தை நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த அதன் பிரதான வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் அடிப்படையில், கொரோனா வைரஸை பரப்புகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருக்கின்றமையை அவதானிக்க முடிகிறது.

அத்தோடு, நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில், அவர்களது மாதிரிகளில் கொரோனா வைரஸின் செறிவு குறைவாக உள்ளமையும் தெரிய வந்துள்ளது என தெரிவித்துள்ளார்.



இதன்மூலம் எதிர்வரும் காலத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கோவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வைத்தியசாலைகள் உட்பட வர்த்தக நிலையங்கள் கட்டுப்பாடுகளுடன் திறக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள நொதேர்ன் வைத்தியசாலை, யாழ். வைத்தியசாலை மற்றும் 8 வியாபார நிறுவனங்களையும் கட்டுப்பாட்டுடன் நேற்று முதல் மீளத் திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி, மருத்துவர் பாலமுரளி தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனங்களில் பணியாற்றுவோர் குடும்பங்களுடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் தவிர்ந்த வேறு பணியாளர்களை கடமைக்கு அமர்த்தி மீளத்திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து காரைநகருக்குத் திரும்பிய ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர் சென்று வந்த இடங்களில் தொடர்புடையவர்கள் கடந்த சனிக்கிழமை தனிமைப்படுத்தப்பட்டனர்.

கடந்த 21 ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காரைநகருக்கு வருகை தந்த அவர், 3 நாட்களுக்கு மேல் பல இடங்களுக்கு நடமாடிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை அவரது மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள இரண்டு தனியார் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளும் மூடப்பட்டன.

அந்த நபர் வருகை தந்த போது கடமையிலிருந்த அனைவரும் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் நகரில் போக்குவரத்துச் சேவை வழங்கும் நிறுவனம், இரண்டு புடைவையகங்கள், புத்தகக் கடை, கராஜ், வெதுப்பகம் உள்ளிட்டவைகளும் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் மூடப்பட்டன.

இவ்வாறு மூடப்பட்ட நிறுவனங்களில் காரைநகர் வாசி சென்ற போது கடமையிலிருந்த 105 பேர் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களைத் தவிர்த்து ஏனையவர்களை கடமைக்கு அமர்த்தி மூடப்பட்ட நிறுவனங்களை நேற்று தொடக்கம் திறக்க அனுமதிக்கப்படுவதாக யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகரத்தில் நேற்று 33 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. (5-33)

## 100 குடும்பங்கள் தனிமைப்படுத்தல் காரைநகரில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(நல்லூர்)
காரைநகரில் 100 குடும்பங்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் பிரதேசத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் இந்துக் கல்லூரி 3 நாட்களுக்கு மூடப்பட்டுள்ள நிலையில் யாழ்ரன் கல்லூரியில் 20 சதவீத மாணவர் வருகையே காணப்பட்டது.

கொழும்பிலிருந்து காரைநகருக்குத் திரும்பிய ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர் சென்று வந்த இடங்களில் தொடர்புடையவர்கள் கடந்த சனிக்கிழமை தனிமைப்படுத்தப்பட்டனர்.

காரைநகர் பிரதேசத்தில் கடைகள் பல மூடப்பட்டுள்ளன. பிரதேசத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் பலர் பணிக்குச் செல்லவில்லை. பாடசாலையில் மாணவர் வரவு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் ஒரு தொகுதியினரின் பி.சி.ஆர். பரிசோதனை இன்று நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-33)

## கண்டி-திகனயில் நில அதிர்வு

(கண்டி)
கண்டி- திகன, அம்பகோட்டை பகுதியில் சிறிய அளவிலான நில அதிர்வு உணரப்பட்டதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப்பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.45 மணியளவில் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக அந்த பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உணரப்பட்டுள்ள நில அதிர்வு ரிக்டர் 2 இற்கும் குறைவாக பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கண்டி மாவட்டத்திற்குள் கடந்த இரு மாதங்களில் பதிவான நில அதிர்வுகள் தொடர்பில் ஆராய்ச்சிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழு, இந்த நில அதிர்வு தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

# பி.சி.ஆர். பரிசோதனையை புறக்கணிப்போருக்கும் உதவுவோருக்கும் மூன்று ஆண்டுகள் சிறை

## எச்சரிக்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

**(கொழும்பு)**

**பி.சி.ஆர். பரிசோதனைகளை புறக்கணிப்பவர்களையும் அவர்களுக்கு உதவுபவர்களுக்கும் 3 வருட சிறைத் தண்டனை வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**



அத்தோடு தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறுபவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்காக பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்து வரும் நிலையில் சிலர் அதனை புறக்கணித்து வருகின்றனர்.

அவ்வாறானவர்களுக்கு சிலர் உதவுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இத்தகைய நபர்கள் தொடர்பில் தகவல்களை திரட்டி பீ“அறிக்கை தயாரித்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை இந்த நபர்களுக்கு இணையத்தின் ஊடாக உதவி ஒத்துழைப்புகளை வழங்கிவரும் நான்கு நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்ட விதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், இதன்போது குற்றம் நிரூபிக்கப்படும் இரு தரப்பினரையும் மூன்று வருடங்கள் வரை சிறை வைக்கவும் முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# வீதி அபிவிருத்திப் பணிகள் நாடு முழுவதும் ஆரம்பம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஒரு வருட பதவி பூர்த்தியினை முன்னிட்டு 341 உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள 341 வீதி அபிவிருத்தி பணிகள் நாடு முழுவதும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் செழிப்பு பார்வை' தேசிய திட்டத்தின் கீழ் 100,000 கி.மீ. கிராமப்புற வீதிகள் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டம் எதிர்வரும் சில ஆண்டுகளுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. (ஜ-4)

# இ.போ.ச.பேருந்து வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

தென் மாகாணத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் நாளாந்த வருமானம் அதிகரித்துள்ளதென, இலங்கை போக்குவரத்து சபையின் தென் மாகாண பிரதான முகாமையாளர் ஆர்.வீ. பிரபாத் தெரிவித்துள்ளார்.


இதற்கமைய, தினமும் 6 இலட்சம் ரூபாய் வருமானம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்கள் இ.போ.ச. பேருந்து சேவைகளைப் பயன்படுத்துவதே இந்த வருமான அதிகரிப்புக்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனாவால் 2.5 மில்லியன் வருமான வீழ்ச்சியை எதிர்கொண்டாலும் தற்போது 3.1 மில்லியன் ரூபாய் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ)

# சமூகத்தில் உப கொத்தணிகள் துரிதமாக கட்டுப்படுத்த வேண்டும்

## பாரிய அலையாக உருவாகும் என்கிறார் திஸ்ஸ



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமையில் சமூகத்தில் இருந்து கொரோனா உப கொத்தணிகள் ஏற்பட்டு வருகின்றன.

துரிதமாக கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அது மிகவும் பாரிய அலையாக உருவாகலாம் என வைரஸ் நோய் தொடர்பான நிபுணரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண எச்சரித்தார்.

கொரோனாத் தொற்று காரணமாக இதுவரை நாட்டில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் மரணித்துள்ளனர். அதனால் சுகாதார ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை முறையாக எடுத்துச் செயற்படாவிட்டால் இந்த இரண்டாவது அலையிலேயே இடம்பெறும் மரண எண்ணிக்கை 2, 3 மடங்காகலாம்.

அத்துடன் ஒருசிலருக்கு இந்த கொரோனா வைரஸ் உடலுக்குள் தொற்றிக் கொண்டாலும் அவர்களுக்கு நோய் அறிகுறிகள் காட்டுவதில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. என்றாலும் அவர்கள் அறியாமலே, இந்த வைரஸ் பரவும் நிலை இருக்கின்றது.

அதனால் மூன்றாவது கொரோனா அலை வருவதற்கு முன்னர் இந்த அலையை கட்டுப்படுத்த முடியாவிட்டால் இந்த அலையே பாரிய அலையாக மாறலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# சகோதரர்கள் மோதல்; ஒருவர் பலி

(கொழும்பு)

முல்லேரியா பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிவிட்ட பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின் போது சகோதரர்கள் இருவருக்கும் இடையில் குடும்ப பிரச்சினை காரணமாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதுடன், பின்னர் அது மோதலாக மாறியுள்ளது.

இதன்போது ஒருவர் பொல்லால் அவரது சகோதரரை தாக்கியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ)

# உடல் வலியால் உயிரிழந்த சிறுவன்

(திருமலை)

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குட்டியாகுளம் பகுதியில் 13 வயது சிறுவன் ஒருவர் நேற்று திடீரென உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த அஜீஸ் அஜ்மி எனும் சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் தெரியவருகையில், சிறுவனுக்கு உடலில் வலி ஏற்பட்ட நிலையில் அவர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ)

# வேறு நோய்களால் இறப்போருக்கு ஒரே நாளில் பி.சி.ஆர்.செய்யப்படும்

(கொழும்பு)

கொரோனா அல்லாத வேறு நோய்களினால் இறப்பவர்களுக்கு ஒரே நாளைக்குள் பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தி சடலத்தை கையளிக்க விசேட முறைமையொன்றை மேற்கொள்ள சுகாதார அமைச்சு உடன்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.



வேறு நோய்களினால் இறப்பவர்களின் சடலங்கள் பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தப்பட்டு நான்கைந்து நாட் களின் பின்னரே உறவினர்களிடம் கையளிக்கப்படுவது தொடர்பில் சுகாதார அலுவல்கள் குறித்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் ஆராயப்பட்டது.

இதன்போது இங்கு கருத்து தெரிவித்த முஜிபுர் ரஹ்மான் எம்.பி, கொரோனாவினால் இறப்பவர்களுக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு பின்னரே அறிக்கை கிடைக்கிறது.

அறிக்கை நெகடிவ் ஆக இருந்தாலும் கூட உடனடியாக சடலம் கையளிக்கப்படுவதில்லை. அதற்கும் ஓரிரு நாட்களின் பின்னர் தான் சடலம் கையளிக்கப்படுகிறது. அழுகிய நிலையில் சடலங்கள் வழங்கப்படுவதால் உறவினர்கள் பெரும் அசௌகரியத்திற்கும் மனவேதனைக்கும் உள்ளாகின்றனர். இது தொடர்பாக மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் முன்வைத்த விடயத்தை ஆராய்ந்த சுகாதார அமைச்சின் செயலாளர், ஒரே நாளில் பி.சி.ஆர் பரிசோதனை நடத்தி சடலங்களை கையளிக்க அடுத்த வாரம் முதல் அலுவலகமொன்றை ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளார். (ஜ)

# குணமடைந்தோர் 17,012

(கொழும்பு)


நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து நேற்று முன்தினம் மேலும் 558 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 12 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனாத் தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 23 ஆயிரத்து 484 ஆக காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 808 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 498 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். மேலும் நாட்டில் கொரோனாத் தொற்றினால் இதுவரை 116 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)





கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருபவர்கள் கார்த்திகை தீபம் ஏற்றி வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் கடமையில் இருந்தவர்களும் தத்தமது பகுதிகளில் ஒளி ஏற்றி வழிபாடு செய்துள்ளனர்.




வாசிப்பு மாதத்தை "எங்கட புத்தகங்கள்" குழுமமும் சுன்னாகம் பொதுநூலகமும் இணைந்து முன்னெடுக்கும் "எங்கட புத்தகங்கள்" புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நேற்றுத் திங்கட்கிழமை சுன்னாகம் பொதுநூலக மேல்மாடி மண்டபத்தில் ஆரம்பமானது.

சுன்னாகம் பொதுநூலகப் பிரதம நூலகர் திருமதி- ஜெயலட்சுமி சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன் மற்றும் சமூக ஆர்வலரும் இயற்கை வழி இயக்க செயற்பாட்டாளருமான கு.வசீகரன் ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சிக் கூடத்தைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (படம்:- ரவிசாந்)


## பெறுகை அறிவித்தல்

### யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையினை நடத்துதல் மற்றும் உணவு வழங்கலுக்கான பெறுகை

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்குகின்ற சிற்றுண்டிச்சாலையினை 01.01.2021 - 31.12.2021 வரையான காலப்பகுதிக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் நடத்துவதற்கும் உணவு வழங்குவதற்குமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

படிவக் கட்டணம் - ரூபா 500.00

கேள்வி வைப்பு - ரூபா 10,000.00 (மீளளிக்கத்தக்கது)

படிவ விநியோகம் - 01.12.2020 - 18.12.2020 திகதி வரை (அலுவலக நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை)

விண்ணப்ப முடிவு - 21.12.2020 ஆம் திகதி 15.00 மணி

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(தொலைபேசி இல.021 222 2647) (C-807)

எஸ்.சந்திரராஜா, வலயக்கல்வி பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், நல்லூர்.



## வேலைக்கு ஆட்கள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்டம் சம்பந்தமான சகல வேலைகளும் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். தோட்டங்களில் தனியாக வேலை செய்பவர் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளம் 30,000/=

காவல் வேலைக்கும் ஆள் தேவை. சம்பளம் 15,000/= மேலதிக வேலை செய்தால் அதற்கு சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 168 1697, 077 113 3667

(C-802)


## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபரகட பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ)


## வாழ்வகம்
## விழிப்புலவலுவிழந்தோர் இல்லம்

### புதிய மாணவர் அனுமதி - 2021

வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம், சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2021 ஆம் ஆண்டுக்காகக் கோரப்படுகின்றன. பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும் கவின் கலைகள், மேலதிக வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், கணனிக் கற்கைகள், தியானம், சுகாதார, மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகள் என்பன முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளை உடைய இலங்கைவாழ் தமிழ் மொழி பேசும் பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 23.12.2020க்குப் பிந்தாமல் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழி சமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:- பிள்ளைகளை விடுதியில் அனுமதித்து, சனி, ஞாயிறு தினங்களில் பெற்றோர் சந்திக்க வசதி செய்வதுடன், பாடசாலை விடுமுறை தினங்களில் விரும்பின் தமது இல்லங்களுக்குச் சென்று வரவும் அனுமதிக்கப்படுவர். (C-800)

தொடர்பு:- தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
தொலைபேசி:- 021 224 0146, 076 828 6331.



## நினைவுப் பிரார்த்தனை

அமரர்கள்.

### ஆறுமுகம் சரஸ்வதி தம்பதிகள்

(ஆசிரியர்கள்)

அம்மாவின் திதி: 01.12.2020

தந்தையார் சிவபதமேறு: 08 . 05 . 2003

தாயார் சிவபதமேறு: 14 . 12 . 2016



எங்களை ஆற்றுப்படுத்திய தெய்வங்களை நீள நினைந்து வணங்குகிறோம்.

மாதுமை,
மருதனார்மடம்,
இணுவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## பசுமையான யாழ் 2ஆம் கட்டம் ஆரம்பம்

(குப்பிழான்)

"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியின் "பசுமையான யாழ்" செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டம் இன்று முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் உடுவில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகின்றது.

உடுவிலைச் சேர்ந்த அமரர் சின்னையா நவரத்தின ராஜாவின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் முழு அனுசரணையுடன் "பசுமையான யாழ்" செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டம் இடம்பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பசுமையான யாழ்ப்பாணத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் குறித்த செயற்றிட்டத்தில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என "விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியினர் தெரிவித்துள்ளனர். (5-18)

## யாழில் காப்பெற் வீதியாக மாறும் 14 வீதிகள்

(யாழ்ப்பாணம்)

நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற விசேட ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக கிராமிய வீதிகளை காப்பெற் வீதியாக மாற்றும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 'ஒவ்வொரு உள்ளூராட்சி தொகுதிகளுக்கும் ஒரு வீதி' என்ற வீதம் யாழ்.மாவட்டத்தில் 14 வீதிகள் காப்பெற் வீதியாக மாற்றும் செயற்றிட்டம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதனால் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நேற்று முன்தினம் நல்லூர் மாநகர சபை எல்லைக்குட்பட்ட 2km நீளமான மூத்த விநாயகர் வீதியை காப்பெற் வீதியாக மாற்றும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட பொறியாளர், யாழ்.மாநகர சபை ஆணையாளர், நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர், J/109 கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5)

## பெருங்கதை விரத உற்சவம் இன்று ஆரம்பம்

(குப்பிழான்)

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருங்கதை விரத உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்தும் 21 தினங்கள் இடம்பெறும்.

தினமும் மாலை 3 மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் சுவாமி உள்வீதி உலா வரும் காட்சியும் இடம்பெற்றுப் பெருங்கதைப் படிப்பும் நடைபெறும்.

உற்சவத்தின் 18 ஆம் நாளான எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் 1008 சங்காபிஷேகமும் காலை 9 மணியளவில் சதுர்த்தி உற்சவமும் மாலை 3 மணியளவில் கஜமுகசங்கார உற்சவமும் இடம்பெறும். 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் மஹாகணபதி ஹோமமும் 108 கலச சங்காபிஷேகமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (5-18)



நெல்லியடி பொலிஸாரின் ஏற்பாட்டில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடுகள் நேற்று முன்தினம் நெல்லியடி சந்தைப் பகுதியில் நடைபெற்றது. (படம்:-மகாலிங்கம்)

## கோப்பாய் வெளியில் கொட்டப்படும் கழிவுகள்



(யாழ்ப்பாணம்)

கைதடி-மானிப்பாய் வீதியில் உள்ள கோப்பாய் வெளியில் நீர் நிலைகளுக்கு மிக அருகாமையில் இரவு வேளைகளில் கழிவுகள் கொட்டப்படுவதாக இயற்கையின் நண்பர்கள் அமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விலங்குக் கழிவுகள், மலக் கழிவுகள், மருத்துவக் கழிவுகள் உள்ளிட்ட சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடிய கழிவுகளே இவ்வாறு கொட்டப்படுவதாகவும் இது தொடர்பாக வலி.கிழக்கு பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேசசபை மற்றும் வடமாகாண சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுக்கு எழுத்து மூலமாக முறையிட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (5-30)

## வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் "கிராமத்திற்கு ஒரு வீடு" என்ற திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு கடந்த சனிக்கிழமை வீடமைப்பிற்கான முதற்கட்ட நிதி வழங்கி வைக்கப்பட்டது. ஜே/347, 339, 335, 333, 330, 303, 300, 306 மற்றும் ஜே/322 ஆகிய 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 9 பயனாளிகளுக்கே இவ்வாறு முதற்கட்ட நிதி வழங்கி வைக்கப்பட்டது. வீடமைப்பிற்கான காசோலைகளை யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் செயலாளர் சதாசிவம் இராமநாதன் வழங்கி வைத்திருந்தார்.

மேலும் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-30)




யாழருவியின் 17 ஆவது ஆண்டு ஆரம்பத்தை முன்னிட்டு 231 கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள குளோபல் வர்த்தக வலையமைப்பு தலைமையகத்தில் சிறிய, நடுத்தர உள்ளூர் உற்பத்தி வர்த்தக முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சங்கிலி எனும் திட்டத்தை யாழ்.மாநகர மேயர் இமானுவல் ஆனல்ட் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

## மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருநாட்டின் பிரதமரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆலயங்கள் தோறும் உலக மக்கள் அனைவரதும் நலன் வேண்டி மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் யாழ். வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் ஈசானிய பாகத்தில் அமைந்துள்ள சிங்கார வேலவன் சிவகாத்திரி அம்பாள் சுந்தரசுவர்க்க வாயில் சந்நிதானத்தின் பிரதம குருக்கள் ராஜஸ்ரீ சிவ.கமல் ராஜ் குருக்கள் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (5-30)




ஏழாலையூர் நண்பர்கள் ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று முன்தினம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெற்றது. இரத்ததான நிகழ்வைத் தொடர்ந்து ஏழாலை மேற்கில் பயன்தரு மரங்களும் நாட்டி வைக்கப்பட்டன. (படங்கள்:- செ. ரவிசாந்)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
# வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல்-2021

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் "முதலாவது அட்டவணை" என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும். ஏற்கனவே 2020 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு "இரண்டாவது அட்டவணை" என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2020 தொடக்கம் 31.12.2020 பிற்பகல் 5.00 மணி வரையாகும். கோவிலில் உப்யகாராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2021"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள் தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதவான், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், அரசாங்க. பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 321 3024/ 021 320 7785 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

**செயலாளர், ந.மோகனரூபன், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

**முதலாவது அட்டவனை -(படிவம்01)**

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்
## ........ஆம் ஆண்டு

1.விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:-..........................
2.பிறந்தநாள்:- ..........................
3.இந்து சமயத்தவரா?:.......................
4.நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா? :-.......................
5.நீங்கள் உறுப்புரிமை 03(2)(ஏ) அல்லது 03(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6.இலங்கை முகவரி:..................
7.விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற்'கட்டளையின் விபரம்:-

**காசுக்கட்டளை/த.க. இல** .................................
**அலுவலகமும் வழங்கிய நாளும்** .............................................
**தொகை** ...............................

8.நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
9.இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10.இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு, வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

.....................................
**விண்ணப்பதாரர் ஒப்பந்தம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில்............ ஆம் ஆண்டு ....................... மாதம் .................... நாளன்று.................. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

**என் முன்னிலையில்**
.....................................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**

**குறிப்பு:-** விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான் முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
2020.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை - (படிவம் 02)**

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்
## ........ஆம் ஆண்டு

செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.
அன்பார்ந்த ஐயா,

**வழிபடுநர் போவைக்கான சந்தா புதுப்பித்கல்**

............... ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன். ............... அஞ்சலகத்தால் .............. ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட .................... இலக்கங்கொண்ட காசுக் கட்டளை/தபாற கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர்:-.................................
முகவரி:-...............................
எனக்குள்ள உபயம்:-........................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்:-..................................

.........................
**உறுப்பினர் ஒப்பம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில்.......................... ஆம் ஆண்டு ............... மாதம்.................. நாளன்று ......................... என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

**என் முன்னிலையில்**
.....................................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**

**குறிப்பு:-** விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(C-798)

# பொலிஸ்மா அதிபர் பிரதமர் சந்திப்பு

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்ரமரத்ன நேற்று திங்கட்கிழமை முற் பகல் விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

இதன்போது புதிய பொலிஸ்மா அதிபருக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் நாட்டின் பாதுகாப்பு நிலைமை மற்றும் பொலிஸ் துறையின் தற்போதைய பணிகள் என்பன குறித்தும் கேட்டறிந்தார். (ஜ-4)


# பொதுப்போக்குவரத்து வழமைக்கு

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது.

சாதாரண கால அட்டவணைக்கு அமைய அனைத்து பேருந்துகளும் சேவையில் ஈடுபட்டுள்ளதென இலங்கை போக்குவரத்து சபையின் நடவடிக்கை அதிகாரி ஏ.எஸ்.பீ. வீரசூரிய தெரிவித்துள்ளார். (ஐ)

# மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி விபத்து



(நெளுக்குளம்)

வவுனியா தொடரூந்து நிலைய வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில், தொடரூந்து நிலைய வீதியில் இருந்து குருமன்காடு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன், எதிர்த்திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-299)

# முல்லையில் 54 பேருக்கான 2 வார பயிற்சி நிறைவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டவர்களுக்கான பயிற்சி நிறைவு விழாவும் இரத்ததான முகாமும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக நியமனம் வழங்கப்பட்ட 54 பேருக்குமான இரண்டு வார கால தலைமைத்துவப் பயிற்சி நிறைவு விழா நேற்று முன்தினம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் இளைஞர் படையணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் இளைஞர் படையணி நிலைய பொறுப்பதிகாரி வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலரும்கலந்து கொண்டனர்.

நிறைவு விழாவினை முன்னிட்டு இரத்ததான முகாமும் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் இந்த நிகழ்வில்கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இங்கு தொழில் பெற்றவர்களால் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இவர்கள் எதிர்வரும் வாரங்களில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பணிக்கு அமர்த்தப்பட்டு அவர்களுக்கான சேவைக்காகப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (5-281)



**பெருந்தெருக்கள் அமைச்சின் நிதி உதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 3 கிலோ மீற்றர் நீளம் கொண்ட தரவன் கோட்டை கீரி பிரதான வீதி காப்பெற் வீதியாக புனரமைக்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.**

**இதில் மன்னார் நகர சபை உறுப்பினர்களான செல்வக்குமரன் டிலான், பொலின்ரன், சைமன் குலதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**(படம்:- ஜோசப் நயன்)**

# மரநடுகை செயற்பாடுகள் மகிழ்ச்சியளிக்கிறது

## அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்

**(அக்கராயன்)**

**மரங்களை நாட்டி அதனை வளர்த்தெடுத்து எமது சூழலைப் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும். எனவே இச்செயற்றிட்டத்தில் நானும் கலந்துகொண்டமையையிட்டு மனநிறைவடைகின்றேன் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



நேற்று கிளிநொச்சி பரந்தன் கரடிபோக்கு இணைப்பு வீதியில் இடம்பெற்ற 12 ஆவது கற்பகா திட்டத்தின் கீழ் ஆறாயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மரநடுகை நிகழ்வுகள் மகிழ்ச்சியளிக்கின்றன. அதிகளவான மரங்கள் அழிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அதனை மீள் நிரப்பு செய்யும் வகையில் தொடர்ச்சியாக மரநடுகை செயற்பாடுகள் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்று வருகிறது.

லண்டன் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் பிரதான அனுசரணையில் கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவை, கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை, பிரதேச கமக்கார அமைப்புகள், கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் பங்களிப்புடன் மரங்கள் நடும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச்செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வட மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் பிறேமகுமார், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூர்த்தி. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணைப்பாளர் மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர்கள், விவசாய திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-350)

# பயன்பாடு இல்லாமல் காணப்படும் பாலர் பாடசாலை

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வீரபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சிறுவர் பாடசாலை கடந்த பத்து வருடங்களாக பற்றைக்காடாக காட்சியளிக்கிறது.

2009 ஆம் ஆண்டளவில் சமூக நலன்சார் தனியார் நிறுவனத்தினால் பல மில்லியன் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்பட்ட இச்சிறுவர் பாடசாலை செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ளது.

ஒன்றரை வருடங்கள் மாத்திரம் குறித்த சிறுவர் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்றன. அதன் பின்னர் சிறுவர் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.



தற்போது அச்சிறுவர் பாடசாலை பற்றைக்காடாக காட்சியளிப்பதுடன் அப் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் வீரபுரம் கிராம உத்தியோகத்தரை தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு வினவிய போது,

இக்கட்டடம் பத்து வருடங்களுக்கு முன்னர் தனியார் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. சிறுவர் பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகள் வேறு ஒரு பகுதிக்கு மாற்றப்பட்டமையினால் கடந்த பல வருடங்களாக இச்சிறுவர் பாடசாலை இயங்கவில்லை. குறித்த சிறுவர் பாடசாலையினை மீள் புனரமைப்பதற்கான நடவடிக்கையினை தாம் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார். (5-250)

# ஆலமரத்தை அகற்றாது வீதி புனரமைப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சியில் வீதி அபிவிருத்தி பணியின்போது கிராமத்தின் அடையாளம் மிக்க ஆலமரத்தை அகற்ற மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து மரத்திற்கு பாதிப்பு இல்லாது அபிவிருத்தி செய்ய வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் வீதியிலிருந்து செல்லும் பாரதிபுரம் மத்திய வீதியின் அபிவிருத்தி பணிகள் தற்போது இடம்பெற்று வருகிறது. குறித்த அபிவிருத்தி பணிகளிற்காக மலையாளபுரம் பகுதியில் அடையாளம் மிக்க ஆலமரத்தினை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆலயடி சந்தி என அக்கிராமத்தின் அடையாளமாக காணப்பட்ட குறித்த ஆலமரத்தை அகற்றுவதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மரத்துக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அபிவிருத்தி செய்வதாக உறுதி அளித்தனர். (5-100)

## இராசிபலன்

01.12.2020
கார்த்திகை 16, செவ்வாய்க்கிழமை,
பிரதமை முற்பகல் 5.07 மணிவரை
ரோகினி முற்பகல் 9.17 மணிவரை
சுபநேரம் 10.44-12.14 மணிவரை
இராகுகாலம் 3.14-4.44 மணிவரை
சந்திராஷ்டமம்: அனுசம்
விநாயகர் விரத ஆரம்பம், அமிர்தசித்தம்வளவன்

**மேஷம்**: துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**ரிஷபம்**: தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**: புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**: வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி**: தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், பாக்கிகள் வசூலாகலாம், பற்றாக் குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள்.

**துலாம்**: பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சியில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கூட்டாளிகளிடம் விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்**: வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு**: இனிமையான அனுபங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்**: உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.

**கும்பம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், செய்தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்**: மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஆதரவு பெருகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர்.

**மற்றவர்களை நம்பும் அளவுக்கு உன்னையே நீ நம்பு**

# சிறைக்கலவரத்தின் பின்னால் மறைக்கப்பட்டுள்ள உண்மை

## ஆராய்கிறது சி.ஐ.டி

**(கொழும்பு)**

**மகர சிறைக் கலவரத்தின் பின்னணியில் ஒரு விடயம் மறைக்கப்பட்டு இருப்பதாக அரசாங்கம் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையில் நடந்த கலவரம் தொடர்பான விசாரணை சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகளின் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெறும் குழுநிலை விவாதத்தில் மகர சிறையில் நடந்த கலவரம் தொடர்பாக எதிக்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பலர் இன்று சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சிறைக் கலவரத்தின் பின்னணியில் போதைப்பொருள் விற்பனையாளர்கள் இருப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பி.சி.ஆர்.பரிசோதனைகள் அடுத்த மாதம் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர்.பரிசோதனையை அடுத்த மாதம் முதல் மேலும் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக இரசாயன சேவைகள் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஆர்.எம்.எஸ்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நாட்டில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனைகளின் எண்ணிக்கை அடுத்த மாதம் முதல் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மேலும், கொரோனா தொற்றைக் கண்டறிவதற்காக ஆன்டிஜன் பரிசோதனையும் நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை, கொரோனா தடுப்பூசிகளை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரும் விடயம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க, மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன" என மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிறைச்சாலை மோதலுக்கு அரசே முழுப் பொறுப்பு

## அநுர சாடல்

(கொழும்பு)

மகர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.




பாராளுமன்றில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றிய அவர், "மகர சிறைச்சாலையில், நேற்று முன்தினமிரவு மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

தண்டனை பெறுபவர்கள் சிறைச்சாலைகளில் இருந்தாலும், அவர்கள் அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பதாகவே கருதப்படும்.

எனவே, இந்தச் சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# எரிமலை வெடிப்பால் 3 ஆயிரம் பேர் வெளியேற்றம்




(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஐல் லெவோடோலாக் (Ile Lewotolok) என்ற எரிமலை வெடித்துள்ளது.

இதனை தொடர்ந்து எரிமலை வெடிப்பு பகுதியின் அருகில் வசித்த சுமார் 3 ஆயிரம்பேர் வெளியேறியுள்ளனர்.

இந்தோனேசியாவில் ஈஸ்ட் நுஸா மாகாணத்தில் உள்ள ஐல் லெவொடோலாக் என்ற எரிமலை வெடிக்கத் தொடங்கியுள்ளது.

எரிமலையில் இருந்து எழுந்த புகையும், சாம்பலும் சுமார் 4 கிலோ மீற்றர் உயரத்திற்கு விசிறியடிக்கப்பட்டது. இதையடுத்து சுமார் 26 கிராமங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.

இந்தோனேசியா தீவில் சுமார் 260 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். இங்கு பூகம்பங்கள், சுனாமிகள் மற்றும் எரிமலை வெடிப்புகள் அடிக்கடி ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. ஏனென்றால் அதன் இருபுறமும் பசுபிக் நெருப்பு வளையம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நூற்றிற்கும் மேற்பட்ட விவசாயிகள் சுட்டும் கழுத்தறுத்தும் கொலை!

(நைஜீரியா)

நைஜீரியாவில் 100 இற்கும் மேற்பட்ட விவசாயிகளை சுட்டும், கழுத்தை அறுத்தும் தீவிரவாதிகள் கொலை செய்தனர்.

போர்னோ பிராந்தியத்தைச் சேர்ந்த விவசாயிகள் அறுவடைக்குச் சென்றபோது இந்தக் கொடூரம் நிகழ்த்தப்பட்டதாக ஐ.நா. சபை கூறியுள்ளது.

இருசக்கர வாகனத்தில் வந்த தீவிரவாதிகள், துப்பாக்கியால் சுட்டும் கழுத்தை அறுத்தும் விவசாயிகளைக் கொலை செய்தனர்.

இந்தப் படுகொலைக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்காத நிலையில் போகோஹறாம் அல்லது ஐ.எஸ்.அமைப்பின் மேற்கு ஆபிரிக்கப் பிரிவு இதனைச் செய்திருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

# கார்க்குண்டு வெடிப்பில் 26 வீரர்கள் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதலில் 26 பாதுகாப்பு படையினர் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு மாகாணமான கஸ்னியின் தலைநகர் கஸ்னியின் புறநகர்ப்பகுதியிலேயே இந்த தாக்குதல் இடம்பெற்றதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், 17 பேர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கஸ்னியில் ஒரு தற்கொலை குண்டுதாரி வெடிபொருட்கள் நிறைந்த ஒரு வாகனத்தை வெடிக்கச் செய்ததை உள்துறை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார். இருப்பினும் இந்த தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பினரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (நி)

# பிரான்ஸில் போராட்டம் 98 பொலிஸார் படுகாயம்

(பாரிஸ்)

பிரான்ஸில் புதிய பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக கடந்த சனிக்கிழமை நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்ற போராட்டங்களின் விளைவாக 98 பொலிஸார் படுகாயமடைந்துள்ளார்கள்.




பிரான்ஸில் மோசமான நோக்கத்துடன் பொலிஸாரை புகைப்படம் அல்லது வீடியோ எடுப்பது தண்டனைக்குரிய குற்றம் என அறிவிக்கும் வகையில் புதிய பாதுகாப்பு மசோதா அந்த நாட்டு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதாவுக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படும் என அவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதனிடையே கடந்த வாரம் தலைநகர் பாரிஸில் கறுப்பினத்தை சேர்ந்த இசைக் கலைஞர் ஒருவரை வெள்ளையின பொலிஸ் அதிகாரிகள் சரமாரியாக தாக்கும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, சர்ச்சைக்குரிய இந்த பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்பட்டால் பொலிஸாரின் மிருகத்தனத்தை காட்டும் இதுபோன்ற சம்பவங்களை அம்பலப்படுத்த முடியாமல் போகும் என மசோதா எதிர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், இந்த பாதுகாப்பு மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிஸில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கிப்போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பின்னர் இந்த மோதல் பெரும் வன்முறையாக வெடித்தது.

பொலிஸார் மீது கற்கள், கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் பட்டாசுகள் உள்ளிட்டவற்றை வீசித் தாக்குதலில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கு தீ வைத்தனர். பாரிஸ் நகரம் முழுவதும் போர்க்களமாக காட்சியளித்தது. இந்த வன்முறையில் 98 பொலிஸார் படுகாயம் அடைந்துள்ளனர். (நி)

# கோப்பி குடிக்கும் யானை



(சென்னை)

ஆழ்வார் திருநகரில் 'ஆதிநாயகி' யானை கோப்பி குடிப்பதை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் நவ திருப்பதி கோவில்களில் கடைசி தலமான ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவிலில் 'ஆதிநாயகி' யானை உள்ளது. இந்த யானையை பாகன் பராமரித்து வருகிறார்.

'ஆதிநாயகி' யானையை தினமும் காலையில் பாகன் நடைப் பயிற்சிக்கு அழைத்து செல்வது வழக்கம். நடைபயிற்சியின்போது மேல பஜாரில் உள்ள கோப்பி கடையில் பாகன் கோப்பி குடிப்பது வழக்கம். அப்போது நன்கு ஆற்றப்பட்டு சூடு குறைந்த கோப்பியை வாங்கி யானைக்கும் கொடுக்கிறார். அதனை யானையும் ஆர்வத்துடன் விரும்பி பருகுகிறது.

தினமும் காலையில் 'ஆதிநாயகி' யானை அந்தக் கடையில் கோப்பி அருந்தத் தவறுவது இல்லை. யானை கோப்பி குடிப்பதை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். (நி)

# அமெரிக்காவில் அடுத்த மாதம் தொற்று உச்சத்தை தொடும்

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனாத் தொற்று அடுத்த மாதம் புது உச்சத்தை தொடும் என தேசிய தொற்று நோய் நிறுவன தலைவர் எச்சரித்து உள்ளார்.

அமெரிக்காவில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடி 30 இலட்சத்தை கடந்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் தேசிய தொற்று நோய் மற்றும் ஒவ்வாமை ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் அந்தோனி பாசி, அமெரிக்காவில் நடந்த நன்றி தெரிவிப்பு விடுமுறையால் கொரோனா விதிமுறைகள் முற்றிலும் மீறப்பட்டு உள்ளதாகவும் அதன் விளைவாக விரைவில் பெருந்தொற்று அதிகரிக்கக் கூடும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொரோனாத் தொற்றினால் இதுவரை 14 இலட்சத்து 59 ஆயிரத்து 318 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சபரிமலை ஐயப்ப பக்தர்களின் நடைமுறைப் பிரச்சினைக்கு தீர்வு

## செந்தில் தொண்டமான் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் சபரிமலை ஐயப்ப பக்தர்கள் எதிர்நோக்கியிருக்கும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதாக பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ஐயப்ப குரு சுவாமிகள் ஒன்றியத்தினருக்கும் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் அமைந்துள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.உமாமகேஸ்வரனின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் இலங்கையில் உள்ள ஐயப்ப பக்தர்கள் எதிர்நோக்கியுள்ள நடைமுறை பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

கொவிட் 19 தொற்று காரணமாக இம்முறை சபரிமலையில் ஐயப்ப படி பூஜையில் கலந்து கொள்வதில் தடைகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

அரசாங்கம் இது குறித்து உரிய கவனம் எடுத்து விரத மாலை அணிந்துள்ள பக்தர்களின் நலன்கருதி இந்தியாவுக்குச் செல்வதற்கான பயண ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்துடன் ஐயப்ப விரத மாலை அணிந்து இந்தியாவுக்குச் செல்ல முடியாத பக்தர்களுக்கான மாற்று வழி முறைகள் குறித்தும் இலங்கை முழுவதும் ஐயப்ப வழிபாடுகளை முன்கொண்டு செல்வது பற்றியும் குருசுவாமிமார் தமது கருத்துகளையும் வேண்டுகோள்களையும் முன்வைத்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், இலங்கையில் இருந்து சபரிமலை ஐயப்ப தேவஸ்தான படி பூஜையில் 18 வருடங்களுக்கு மேல் பங்கேற்ற குருசுவாமிமார்களுக்கு அரசாங்க அங்கீகாரத்துடனான சான்றிதழ் வழங்கப்படும்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி உரிய கடவுச்சீட்டு பிரதி மற்றும் உரிய ஆவணங்களை சமர்ப்பிப்பது அவசியமாகும்.

ஐயப்ப குருசுவாமிகள் விரத காலமான இரண்டு மாதங்களில் மாத்திரமல்லாது தொடர்ச்சியாக தமது தேவைப்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இயங்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு இயங்கும் பட்சத்திலேயே நாம் நீண்டகால நோக்கங்களை அடையக் கூடியதாகவும் ஒருசில செயன்முறைகளை மிக இலகுவாகச் செய்யக் கூடியதாகவும் இருக்கும். இதன்மூலமே ஐயப்பன் புகழை இன்னும் மேலோங்கச் செய்ய முடியும் எனத் தெரிவித்தார். (நி-7)

# கொரோனா வைரஸை அழிக்கும் ஆயுர்வேத மருந்து தயார்

## கண்டுபிடித்த இலங்கையர்



(கொழும்பு)

கொவிட்-19 நோய்த் தொற்றைக் குணப்படுத்தக்கூடிய ஆயுர்வேத மருந்து ஒன்றை எமது நாட்டைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவர் ஒருவர் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் நோய்த் தொற்றை முற்று முழுதாக குணப்படுத்தக் கூடிய வல்லமையுடைய உள்நாட்டு ஆயுர்வேத மருந்து ஒன்று, வத்துபிட்டிவல கொவிட் சிகிச்சை நிலையத்தில் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

இந்த மருந்து தொடர்பில் மேற்கத்தைய மருத்துவ முறைமைகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட இரண்டு பரிசோதனைகளின் போது கொவிட் தொற்றாளிகள் 100 வீதம் குணமடைந்துள்ளனர் என பரிசோதனை நடத்திய மருத்துவ குழுவினர் தெரிவிக்கின்றனர்.

குறித்த மருந்து முதலாம் இரண்டாம் கட்டப் பரிசோதனையில் வெற்றிகரமான முன்னேற்றங்களை தந்துள்ளதாக தெரியவருகிறது.

கொவிட் தொற்றுக்கு எதிராக பல்வேறு தடுப்பூசிகளும் உள்நாட்டு ஆயுர்வேத மருந்துகளையும் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி-7)

# திவிநெகும மோசடி வழக்கு பசில் உள்ளிட்ட நால்வர் விடுதலை

(கொழும்பு)

திவிநெகும மோசடி வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட 4 பேரும் நிரபராதிகள் என கொழும்பு மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது, திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான நிதியை முறைகேடாக பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக இவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட இந்த வழக்கில் அனைத்து குற்றச்சாட்டுகளும் இது வரை நிரூபிக்கப்படவில்லை என கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பசில் ராஜபக்ஷ தரப்பு சமர்ப்பிப்புகளை முன்வைத்தது.

இந்த சாட்சியங்களை ஆராய்ந்த பின்னர் அரசு தரப்பும் சமர்ப்பிப்புகளை தாக்கல் செய்தது. அதாவது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பில் போதுமான ஆதாரங்கள் இல்லை என்றும் அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை அடுத்து குறித்த மோசடி வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் 3 பேரை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை இந்த வழக்கில் 3 மாதங்களுக்கு ஒரு தடவை குற்றப் புலனாய்வில் ஆஜராக வேண்டும் என விதிக்கப்பட்ட பிணை நிபந்தனையையும் அவருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையும் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# அரச ஊழியர்களுக்கான பணி வாரத்தில் மூன்று நாட்களே

(கொழும்பு)

அரச நிறுவனங்களுக்கு ஊழியர்களை அழைக்கும் போது தொடர்ந்தும் அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் அழைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி விடுத்துள்ளார்.

அரச சேவையின் அவசியத்திற்கமைய நிறுவனங்களின் பிரதானிகளினால் ஒரு ஊழியரை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு அழைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அந்த நடவடிக்கைகள் சுகாதார பாதுகாப்பு முறைக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா பரவலுக்கு மத்தியில் நிறுவனங்களின் பிரதானிகளினால் பின்பற்ற வேண்டிய ஆலோசனைகள் உள்ளடக்கி ஜனாதிபதி செயலகத்தினால் 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி மற்றும் 2020ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதிகளில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் ஆலோசனைக்கமைய மீள் அறித்தல் வரை செயற்படுமாறு செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 3<br>கி.பா: சூரி,செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Sc, Quantity Serveyor (Private)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் ஆசிரியர் தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/11431 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: செவ் 9 இல் உயரம்: 152cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: G/11482 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 18 ¼ செவ் 9 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: M.Sc Software Eng. IT Engineer (UK)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11432 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 38 ¼ செவ் 3 இல்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: G/11483 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: செவ் 6 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. நகைக்கடை ஊழியர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11434 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: முதுகலைமாணி அதிபர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11488 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா:சூரி,செவ் 4இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/11436 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 41 ¼ செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி அரச கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11491 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# துப்பாக்கி ரவைகள் மீட்பு



(வாழைச்சேனை)

மட்டக்களப்பு வாழைச் சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கோரவெளி காட்டுப் பகுதியில் ஒரு தொகை துப்பாக்கி ரவை கள் மீட்கப்பட்டுள்ளதாக வாழை ச்சேனை பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலினை அடுத்து அவ்விடத்திற்கு விரை ந்த பொலிஸார், குறித்த பகுதி யிலுள்ள நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஆயி ரத்துக்கு மேற்பட்ட துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (நி-7)

# சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படும் விமான நிலையம்

(கொழும்பு)


வெளிநாட்டு சுற்றுலாப் பய ணிகளை நாட்டுக்குள் அனு மதிக்கக் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அரசு விரைவில் மீளத் திறக்கவுள் ளது எனத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இந்த வாரத்தில் இது குறித்த பேச்சு சுகாதார அமைச்சு மற் றும் சுற்றுலாத்துறை அமைச்சு அதிகாரிகளுக்கு இடையே நடைபெறும் என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

முதல் கட்டமாக 44 ஆயிரம் வரையான வெளிநாட்டுச் சுற்று லாப் பயணிகளை அழைக்கும் எதிர்பார்ப்பு இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், வெளி நாட்டு சுற்றுலாப் பயணிக ளுக்கு மாத்திரம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் விரைவில் திறக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-7)

# மூடிய அறைக்குள் முப்பது நிமிடங்கள்; அஜித் டோவால்-சம்பந்தன் மந்திராலோசனை





(கொழும்பு)

இந்தியப் பிரதமரின் பாது காப்பு ஆலோசகர் அஜித் டோவால் இலங்கை சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரலில் நிரல்படுத்தப்படாத நிலை யில் இந்தியா திரும்புவ தற்கு முன்னதாக இறுதி நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை திடீரென சந்தித்து பேசியுள்ளார்.

முத்தரப்புப் பாதுகாப்புப் பற்றிய பேச்சுக்களுக்காக இலங்கைக்கு வருகை தந் திருந்த இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் நேற்று முன்தினம் நாட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பின் தலைவர் இரா.சம்பந் தனை அழைத்து மூடிய அறைக்குள் சுமார் 30 நிமிட ங்கள் பேச்சு நடத்தினார்.

அஜித் டோவாலின் கொழும்பு நிகழ்ச்சி நிரலில் முன்னர் அறிவிக்கப்படாத இந்த சந்திப்பு சத்தம் சந்தடி யின்றி நடைபெற்றிருக்கி ன்றது.

அஜித் டோவால் கொழு ம்பை விட்டு புறப்படுவதற்கு முன்னர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்ல த்துக்குச் சம்பந்தனை அழைத்து அவருடன் விரி வான பேச்சுக்களில் ஈடுபட் டார்.

இந்தப் பேச்சுக்கள் இடம் பெற்றமையை சம்பந்தனும் உறுதிப்படுத்தினார். "இலங் கையின் அரசியல் விவகார ங்கள், இலங்கையின் அபிவி ருத்தி, வடக்கு, கிழக்கு அபி விருத்தி உட்பட பல விடய ங்கள் குறித்தும் பேசி னோம்" என்றார் அவர்.

இலங்கை - மாலைதீவு- இந்தியா ஆகிய நாடுகளு க்கு இடையிலான முத் தரப்பு பாதுகாப்பு மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கொழு ம்புக்கு வருகை தந்த இந்தி யாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவா லின் இலங்கை விஜய நிகழ் ச்சி நிரலை ஏற்கனவே இந்தியத் தரப்பு வெளியிட்டி ருந்தது.

இலங்கை ஜனாதிபதி, இலங்கைப் பிரதமர், இலங் கையின் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் ஆகியோ ருடனான சந்திப்புக் குறித் தெல்லாம் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

ஆனால், சம்பந்தனுட னான சந்திப்பு முன்னர் குறித்தொதுக்கப்படவி ல்லை. (நி-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2168

**மதி**

கணவன் : செல்லம் சப்பாத்தி சுப்பரா செஞ்சிருக்கடி. நல்லா இருக்குது என்று தானே சென்னேன் அப்புறம் ஏன் முறைக்கிறாய்



மனைவி : அது தோசை

**ஸத்தீஸ்**



மனைவிக்கு பிடித்த மாதிரி எப்படி நடந்து கொள்வது என்று கூகுளில் தேடினா நெட் கட்டாயிருச்சு அப்ப இது இன்டர்நெட் பிரச்சினை போல..!

**சங்கீத்**

நான் உன் உடம்புக்குள் வந்தது கூட தெரியாம இன்னும் நீ கைய தேச்சு தேச்சு கழுவுறத பார்த்தா எனக்கே கவலையாத்தான் இருக்கு...




**சாரா**

ஐயா ஜோசியரே வழக்கம் போல நமக்கு போனஸ் வராது போல இருக்கு...



அதனால எவன் கடன் கொடுப்பான் என்று உன் கிளிய கேட்டுச் சொல்லு. எவன் சிக்குறான் என்று பார்ப்பம்...

**டினா**

சின்ன வயசில 10 பேர் காசு போட்டு இந்த பந்தை வாங்கினோம்...



இன்னைக்கு 10 பந்தை வாங்க காசு இருக்கு. பத்து பேரை விளையாட வர வைக்க முடியவில்லை

**மிது**

நம் வாழ்வில் எல்லாம் ஒரு நாள் மாறும் ஆனால் ஒரே நாளில் எல்லாம் மாறிவிடாது..




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகர சிறையில் தீ விபத்து;

# உயிரிழப்பு 9 ஆக அதிகரிப்பு

## ○ 70 பேர் படுகாயம்

## ○ பதற்றம் நீடிப்பு



**(கொழும்பு)**

**மகர சிறைச்சாலையில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.**

உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்போது ராகமவில் அமைந்துள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஷெல்டன் பெரேரா தெரிவித்துள்ளதுடன், இதில் படுகாயமடைந்த 70 பேர் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மகர சிறைச்சாலையில் ஒரு குழப்பமான நிலையே உள்ளதாகவும், நிலைமையை கட்டுப்படுத்த அதிகாரிகள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது ஏற்பட்ட தீ விபத்தில் குறித்த கைதிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஓய்வுபெறும் வயதெல்லை அதிகரிப்பு வெளிச்சத்திற்கு வரும் பிரச்சினைகள்

(கொழும்பு)

தனியார் துறையில் பணியாற்றும் ஆண் ஊழியர்களினதும் பெண் ஊழியர்களினதும் ஓய்வுபெறும் வயதை 60 ஆக நீடிப்பதற்கு ஊழியர் சேமலாப நிதிய சட்டத் திருத்த யோசனை மறைந்து கிடக்கும் பல பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருப்பதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 72 வயதாகவும் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 77 வயதாகவும் தற்போது இருப்பதை அடிப்படையாகக்கொண்டு தனியார் துறை ஊழியர்களின் வயதெல்லை 60 ஆக உயர்த்தப்படுவதாக பிரதமரும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ தனது 2021 பட்ஜெட்டில் அறிவித்தார்.

ஆனால், முன்கூட்டியே தனியார் துறை ஊழியர்கள் தங்களது 55 வயதில் ஓய்வுபெற விரும்பினால், அவர்கள் தங்களது ஊழியர் சேமலாப நிதியத்தை வாபஸ் பெறுவதற்கு அனுமதிக்கப்படுவார்களா? என்பது தெளிவில்லை.

ஓய்வுபெறும் வயதெல்லையை 60 ஆக உயர்த்துவது தனியார் துறை ஊழியர்களைப் பொறுத்தவரை, நல்லதொரு யோசனையே என்ற போதிலும் முன்கூட்டியே அவர்கள் ஓய்வுபெற விரும்பினால், 60 வயதை அடையும்வரை தடுக்காமல், அவர்களின் விருப்பப்படி செய்வதற்கான தெரிவு இருக்கவேண்டும் என்று சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர்கள் சங்கத்தின் இணைச் செயலாளரான அன்டன் மார்க்கஸ் வேண்டுகோள் விடுத்தார்.

பிரதமர் பட்ஜெட்டில் முன்வைத்த இந்த யோசனை வேறு எந்தவொரு நோக்கத்துக்காகவும் அல்லது பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு தனியார் துறை ஊழியர்களின் வாழ்நாள் சேமிப்பில் இருந்து அரசு குறைந்த வட்டி வீதத்தில் நிதியைக் கடனாகப் பெறுவதற்கான ஒரு முயற்சியாகிவிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பொருளாதார சவால்களை வெல்லும் ஆற்றல் அரசாங்கத்திற்கு உண்டு

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

கொவிட்-19 நெருக்கடியால் தலைதூக்கிய பொருளாதார சவால்களை வெல்லும் ஆற்றல் அரசாங்கத்திற்கு உண்டென அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாத்தளையில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய அமைச்சர் கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடியால் சகல வருமான வழிவகைகளும் முடக்கப்பட்டுள்ளன. எனினும் எத்தகைய நிலைமையிலும் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறைக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்றுமதி வருமானம், ஆடை உற்பத்தி சார் வருமானம், வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அனுப்பும் வருமானம் என்ற ரீதியில் சகல வருமானங்களும் குறைந்துள்ளன. உலகம் முழுவதும் உணவு நெருக்கடி ஏற்படும் சாத்தியமும் உள்ளது. பயிர்ச்செய்கை பாழாகும் பட்சத்தில் ஆறு வகை பயிர்களுக்காக ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் என்ற ரீதியில் இழப்பீடு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எடையற்ற நிலை

எடையைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம்? என்று கேட்டார் ஒருவர். இது என்ன பெரிய விடயம். பேசாமல் புறப்பட்டு மேலே ஆகாயத்திற்குப் போய் விடுங்கள். அங்கே போனால் உங்கள் எடை குறைந்துவிடும் என்றார் இன்னொருத்தர்.

இவர் வேடிக்கையாக இப்படி சொன்னாலும் கூட அவர் அப்படி சொன்னதிலே ஒன்றும் தப்பு இல்லை.

இப்பொழுது நாம் கூட ஆகாயத்திற்குப் புறப்பட்டுப் போனால் எங்கள் எடை குறைந்து விடும். ஒரு கட்டத்திலே நமக்கு எடையே இருக்காது. அந்தரத்திலே மிதக்க ஆரம்பித்து விடுவோம். விண்வெளியில் ஏற்படும் இந்த நிலைமையை எடையற்ற நிலை என்று சொல்கின்றார்கள்.

விண்வெளிக்குப் போக வேண்டும் என்று ஆசைப்படுகின்ற எல்லோருக்கும் இங்கே அது மாதிரி ஒரு எடையற்ற நிலையை உண்டாக்கி பயிற்சி கொடுக்கின்றார்கள்.

மைக் ரோஜர்ஸ் என்று ஒருத்தர். அவருக்கு 64 வயது. இரண்டாவது உலக யுத்தத்திலே இடது காலை இழந்தவர். இந்த வயதிலே–இந்த நிலையிலே அவருக்கு விண்வெளியில் பிரயாணம் செய்து பார்க்க வேண்டும் என்று ஒரு ஆசை வந்தது.

வழக்கமாக எல்லோரும் அந்த வயதிலே ஒரேயடியாக மேலே போவதற்கு வழி என்னவென்று தான் கவலையோடு காத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இவர் கொஞ்சம் வித்தியாசமானவர். அதனால் தான் இப்படி ஆசைப்பட்டார். உடனே ஐரோப்பிய விண்வெளி அமைப்புக்கு விண்ணப்பம் போட்டார். அந்த அமைப்பும் சரி என்று ஒத்துக் கொண்டது.

உடனே இவருக்கு பயிற்சி கொடுக்க ஆரம்பித்தது. அந்த பயிற்சி பிரான்ஸிலே நடக்கின்றது. அது எப்படி என்றால்.

விண்வெளிக்குப் பிரயாணம் செய்கின்றவர்கள் அங்கே போய் சேர்ந்தவுடனே எடை இல்லாமல் போய் விடுகிறது இல்லையா? அதேமாதிரி ஒரு எடையற்ற நிலையை ஒரு விமானத்துக்குள்ளேயே உண்டாக்குகின்றார்கள்.

அந்த விமானம் ஒரு தடவை மேலே புறப்பட்டு விட்டால் மேல் நோக்கிச் செல்வதும் – கீழ் நோக்கிச் செல்வதுமாக சுமாராக 2 1/2 மணி நேரம் பறக்குமாம்.

அந்தச்சமயத்திலே அது 40 தடவை கீழ் நோக்கிப் பாயுமாம். அதாவது அந்த விமானத்திற்குள்ளே இருக்கின்றவர் ஒவ்வொரு தடவையும் 20 விநாடி வீதமாக 40 தடவை எடையற்ற நிலைக்கு வந்து விடுகின்றாராம்.

எங்கள் முதியவர் மைக்ரோஜர்ஸ் ஏறிப்போன விமானம் இது மாதிரி 30 தடவை எடையற்ற நிலையை உண்டாக்கியதாம். இதிலே இன்னொரு அவஸ்தையுண்டு.

விமானம் வேகமாக மேலே போகின்ற பொழுது உடம்பு எடை அளவுக்கு மீறித் தெரியும். இந்த எடை அதிகரிப்பு அவஸ்தையை அனுபவித்ததற்கு பின்பு தான் எடையில்லாத சுகத்தை அனுபவிக்க முடியும்.

மேலே போயிட்டு வந்த அந்த பெரியவர் தன்னுடைய அனுபவத்தை விபரமாகச் சொல்லியிருக்கின்றார்.

தாடையை மார்பிலே பதித்தவாறு அவரை படுக்க வைத்தார்களாம். விமானம் வேகமாக மேலே போகின்ற பொழுது அவருக்கு அவரின் தலையினுடைய எடை இரண்டு மடங்கு அதிகமாகப் போனது மாதிரித் தெரிந்ததாம். மார்பிலே இருந்த கமரா ஏதோ ஒரு பாறாங்கல்லை தூக்கி வைத்தது மாதிரி அழுத்தியதாம்.

ஆனால் விமானம் வேமாக கீழே இறங்கின்ற பொழுது...அவர் அவருடைய ஆசனத்திலே இல்லையாம். மேலே கிளம்பி அந்தரத்திலே மிதக்க ஆரம்பித்து விட்டாராம். காலை லேசாக உதைச்சிருக்கின்றார். உடனே பந்து மாதிரி இன்னும் கொஞ்சம் மேலே எழும்பினாராம். அவருடைய கமராவும் அந்தரத்திலே மிதந்ததாம்.

அவர் பையிலே இருந்த பேனா வெளியே கிளம்பி அவருடைய மூக்குக்கு நேராக மிதந்து வேடிக்கை காட்டியதாம். எடையற்ற நிலையிலே இருந்த பொழுது எனக்கு ஒரு செயற்கைக் கால் பொருத்தப்பட்டிருக்கின்றதையே நான் உணரவில்லை என்கின்றார் அவர்.

சாதாரணமாக பிளேனிலே போகின்றவர்கள் இந்த எடையற்ற நிலையை ஓரளவுக்கு உணர முடியும். பொருட் காட்சியில் ரங்கராட்டினத்திலே ஏறி சுற்றிப் பார்த்தாலும் இது தெரியும்.

மேலே எழும்புகின்ற பொழுது எங்கள் உடம்பு எடை கூடினது மாதிரித் தெரியும்... கீழே அழுத்தும்.

கீழே இறங்குகின்ற பொழுது உடம்பு எடை இலேசானது மாதிரித் தெரியும்.

விண்வெளிப் பயணத்திலே இந்த எடையற்ற நிலை என்பது ஒரு முக்கியமான விடயம். அதெல்லாம் சரி...அதை ஏன் வேலை இல்லாமல் இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டிருக்கின்றாய்என்று நீங்கள் கேட்கலாம்.

வருங்காலத்திலே விண்வெளிப் பயணம் மிகவும் சர்வசாதாரணமாக ஆகிடலாம். நாங்களும் அடிக்கடி போய் வர வேண்டிய அவசியம் வந்தாலும் வரும் அல்லவா அதனால் தான்.

இருந்தாலும் எடையற்ற நிலை என்பதைவிட இருக்கின்ற எடையை குறைக்கிறது எப்படி என்பது தான் எங்களில் பலபேருடைய கவலை. வெயிட்டைக் குறைப்பதற்கு என்ன சேர் செய்யலாம் என்று யோசனை கேட்டார் ஒருத்தர்.

தினமும் குதிரைச் சவாரி செய்யுங்களேன் என்றார் ஒரு டாக்டர்.

ஆறு மாதம் குதிரைச்சவாரி செய்தார் இவர். அதன் பின்பு டாக்டரிடம் போனார்.

எவ்வளவு எடை குறைந்திருக்கின்றது? என்று கேட்டார் அவர். 15 கிலோ குறைந்திருக்கு டாக்டர் என்றார். உங்களுக்கா? என்றார். இல்லை குதிரைக்கு என்றார் அவர்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



செங்கோலில் உள்ள கருங்காலி மற்றும் நீலமாணிக்கக்கற் பகுதிகள் இலங்கையிலிருந்து விநியோகிக் கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது. -

இலங்கையின் பண்டைய விகாரையின் கட்டடவியல் இந்த வடிவமைப்பில் செல்வாக்குச் செலுத்தியதுடன், அலங்காரம் தாமரையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

விரிந்த தாமரை முடிவின்மை மற்றும் அழகு போன்றவற்றிற்கான சின்னமாகக் காணப்படுவதுடன் குவிந்த தாமரை நிறைவான சமாதானத்தை எடுத்துக் காட்டுகிறது.

இச்செங்கோல், கருங்காலி மரத்தினால் செய்யப்பட்டு, வெள்ளி, 18 கரட் தங்கம், நீலமாணிக்கக்கற்கள் என்பவற்றினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அடிப்பகுதி வெள்ளி மற்றும் தங்கத்தினாலான குவிந்த தாமரையால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது பிடி பொறிக்கப்பட்ட இரு தங்கப் பட்டிகளைக் கொண்டுள்ளது.

அதன்மேல், நீண்டதாகப் பொறிக்கப்பட்ட தங்கப் பட்டிகளைத் தாங்கும் நீலமாணிக்கக் கற்களினாலான பட்டி காணப்படுவதுடன் அதன்மேல் எண்கோணவடிவிலான வெள்ளிப் பிடியொன்றும் காணப்படுகின்றது. இது, பகரமாக, நீலமாணிக்கக்கற்கள் மற்றும் தங்க மணிகள் தொங்கும் பூமியின் நாலாபக்கங்களையும் உருமாதிரியமைக்கும் தாமரை வடிவில் காணப்படும் வெள்ளி மற்றும் 18 கரட் தங்கத்தினாலான நான்கு பகுதிகளுக்கும் உறுதுணையளிக்கிறது.

நிலைத்திருக்குந்தன்மையின் அடையாளம் சூரியன் மற்றும் சந்திரன், முன்னேற்றத்தின் அடையாளம் சக்கரம் மற்றும் செழிப்பின் அடையாளம் பூக்கிண்ணம் (பூரண கும்பம்) போன்ற நான்கு சின்னங்கள் செதுக்கப்பட்ட கன சதுரமொன்று இதன் மேலே காணப்படுகிறது.

இதன் மேல் காணப்படும் பெரிய இரு வாளேந்திய சிங்கள சிங்கங்கள் பொறிக்கப்பட்ட வெள்ளிக் கோளம் செங்கோலின் முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. இக்கோளத்தின் மேல் தூய்மையின் அடையாளமான தாமரை, நீலமாணிக்கக்கற்களினாலான இன்னுமொரு பட்டி மற்றும் எண்கோண வடிவ மெருகூட்டப்பட்ட பளிங்கு முனையமும் காணப்படுகிறது.


பாராளுமன்றத்தினதும் பாராளுமன்றத்தினூடாக சபாநாயகரினதும் அதிகாரச் சின்னமாக செங்கோல் விளங்குவதால், பாராளுமன்றத்தின் அடையாளங்களின் முக்கிய பகுதியொன்றாக செங்கோல் காணப்படுகின்றது. செங்கோல் இன்றி பாராளுமன்றம் சட்டவுருப்பெறாது என்பதுடன் எவ்வித அமர்வுகளும் இடம்பெற முடியாது.

சபாநாயகர் அக்கிராசனத்தில் அமர்ந்திருக்கும் போது, அதாவது, பாராளுமன்ற அமர்வு இடம்பெறுகின்றபோது பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் மேசைக்குக் கீழ் காணப்படும் மேற்தாங்கிகளில் செங்கோல் அரச தரப்பை நோக்கி எண்கோணத்தினாலான மெருகூட்டப்பட்ட பளிங்கு முனையம் வைக்கப்பட்டிருக்கும்.

சபாநாயகர் அக்கிராசனத்திலிருந்து வெளியேறும் போது, அதாவது பாராளுமன்றம் குழுவொன்றாக அமரும் போது பாராளுமன்றம் முறையாக சட்டவுருப்பெறவில்லை என்பதைக் காட்டுவதற்கு மேசையின் கீழுள்ள தாழ்வான தாங்கிகளுக்கு செங்கோல் மாற்றப்படும்.

**செங்கோல் சபையில் வைத்திருக்கப்படும் போது அதனை தொடுகின்ற அல்லது அதனை உயர்த்துகின்ற எவரேனும் உறுப்பினர் பாரதூரமான ஒழுங்கீனத்தைப் புரிகின்றார் என்பதுடன், அத்தகைய தவறு அவ்வுறுப்பினரால் முதலாவது தடவையாகப் புரியப்பட்டதாகவிருந்தாலும் அவர் நான்கு வார காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.**

## செங்கோலின் வடிவமைப்பு




குறிப்பாக புதிய சபாநாயகரின் தெரிவு போன்ற பல பாராளுமன்ற நிகழ்வுகளில் இன்றியமையாததொரு கூறாக செங்கோல் காணப்படும். வாக்கெடுப்பு செங்கோலின்றி இடம்பெற முடியாது. பொதுத் தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் செங்கோல் படைக்கலச் சேவிதரால் பாராளுமன்ற சபாமண்டபத்துக்கு கொண்டுவரப்பட்டு மேசையின் கீழுள்ள தாங்கிகளின் மீது வைக்கப்படும். சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டு அக்கிராசனத்தில் அமர்ந்த பின்னர் மேசையின் மேலுள்ள தாங்கிகளில் படைக்கலச் சேவிதர் செங்கோலை வைப்பார்.

சபாமண்டபத்துக்கு வரும்போதும், அதிலிருந்து வெளியேறும் போதும் படைக்கலச் சேவிதர் தமது வலது புயத்தில் செங்கோலைத் தாங்கிச்செல்ல, சபாநாயகர் பிரதி படைக்கலச் சேவிதரால் வழிநடத்தப்படுவதுடன் பாராளுமன்ற செயலாளர் நாயகமும் அவரது பிரதி செயலாளர்களும் சபாநாயகரைப் பின்தொடர்வர். சபாநாயகரின் பிரசன்னத்தை பிரதி படைக்கலச் சேவிதர் சபைக்கு அறிவிப்பார்.

### மேல் சபையின் (செனட் சபை) செங்கோல்

1972 வரையில் காணப்பட்ட மேல் சபையினால் (செனட்) இந்த செங்கோலை தயாரிப்பதற்கான பொறுப்பு "ஹேமசந்திர சகோதரர்கள்" என அழைக்கப்படும் கொழும்பிலுள்ள நகை தயாரிப்பு கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டது. இந்த செங்கோலை நுண்கலை கல்லூரியைச் சேர்ந்த கலைஞர் டபிள்யூ. ஏ. ஆரியசேன வடிவமைத்ததாக கூறப்படுகிறது. குறிப்பிடப்பட்ட கம்பனியின் அறிவுறுத்தலின் பிரகாரம், ரம்புக்கன்ன, தொம்பேமடையைச் சேர்ந்த கைவினைஞர் ஈ. என். பியதிலக்க இதனை தயாரித்தார்.

**1949 முதல் 1972 வரையில் செனட் சபையில் "ஜென்டில் மேன் அஸர்" (Gentleman Usher) பதவியை நான்கு அலுவலர்கள் வகித்துள்ளனர். செனட் சபையினால் பயன்படுத்தப்பட்ட செங்கோலானது 1956, நவம்பர் 01 இல் அப்போதைய தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலகவினால் செனட் சபைக்கு வழங்கப்பட்டதாகும்.**

இந்த செங்கோல் 52 அங்குலம் நீளமுடையதாகும். இதன் நிறை 7.5 இறாத்தல். இது 355 பகுதிகளைக் கொண்டது. இதனை நாற்பது பாகங்களாக பிரித்தெடுக்க முடியும். தலைசிறந்த இந்த படைப்பினை உருவாக்குவதற்கு ஏனைய பொருட்களுக்கு மேலதிகமாக இரண்டு யானை தந்தப் பகுதிகள், 20 கரட் உடைய தங்கப் பவுண்கள், 3.5 இறாத்தல் நிறையுடைய 45 வெள்ளித் துண்டுகள், பல மாணிக்கக் கற்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த செங்கோலின் மேல் பாகத்தில் "சான்தின்டிரையோச்சா நிபாகோச்சா" என்ற பாளி வாசகம் பொறிக்கப்பட்டுள் ளது. 1949 முதல் 1972 வரையில் செனட் சபையில் "ஜென்டில் மேன் அஸர்" (Gentleman Usher) பதவியை நான்கு அலுவலர்கள் வகித்துள்ளனர்.

### ஹன்சாட் திணைக்களம்

பாராளுமன்ற செயலகத்தில் உள்ள பிரிவுகளில் ஹன்சாட் திணைக்களமும் ஒன்றாகும். பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற உரைகளையும் கூட்ட நடவடிக்கைகளையும் "ஹன்சாட் அறிக்கை" மற்றும் பாராளுமன்றக் குழுக்களின் கூட்ட நடவடிக்கைகளையும் சொல்லுக்குச் சொல் அறிக்கையிடுதல் ஹன்சாட் திணைக்களத்தின் கடமைப் பொறுப்பாகும்.

**பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற உரைகளையும் கூட்ட நடவடிக்கைகளையும் "ஹன்சாட் அறிக்கை" மற்றும் பாராளுமன்றக் குழுக்களின் கூட்ட நடவடிக்கைகளையும் சொல்லுக்குச் சொல் அறிக்கையிடுதல் ஹன்சாட் திணைக்களத்தின் கடமைப் பொறுப்பாகும்.**

(தொடரும்...)

# புறக்கோட்டை திறக்கப்பட்டாலும் மொத்த விற்பனைக்குத்தடை

(கொழும்பு)

கொழும்பு - புறக்கோட்டை வழமைக்கு கொண்டுவரப்பட்டாலும் மொத்த விற்பனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,


கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் ஐந்து பொலிஸ் பிரிவுகள் வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

அதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் மட்டக்குளி, வெரலபட மற்றும் புறக்கோட்டை பொலிஸ் பிரிவுகளும் கம்பஹா மாவட்டத்தில் ராகம மற்றும் நீர்கொழும்பு பொலிஸ் பிரிவும் நேற்று முன்தினம் காலை 5 மணியுடன் வழமைக்கு திரும்பியுள்ளன.

எனினும் மட்டக்குளி, வெரலபட பொலிஸ் பிரிவுகளில் சில பிரதேசங்களும் தொடர்மாடி குடியிருப்புக்களும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்கள் தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் சுகாதார பிரிவினரும் கண்காணித்து வருகின்றனர்.

புறக்கோட்டை பொலிஸ்பிரிவு வழமைக்கு கொண்டு வரப்பட்டாலும் 4 மற்றும் 5 ஆம் சந்தி பகுதிகள் திறக்கப்படமாட்டாது. இதேவேளை மெனிங் சந்தையும் திறக்கப்படமாட்டாது. இந்த பகுதியில் மொத்த விற்பனை நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாது எனத் தெரிவித்தார். (ஐ)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## பூஜை செய்வது எப்படி?

(தொடர்ச்சி)

**12.தீபம்:**

சோடச உபசாரங்களில் தீபம் காட்டுவது என்பது மிக மிக முக்கியமானது. சுவாமிக்கு தீபம் காட்டப்படும் போது வழிபாட்டால் நம்மிடம் உள்ள ஆணவம் நீங்கி ஞானம் பெற முடியும்.

தீபம் ஏற்ற பசு நெய் பயன்படுத்துவது மிகவும் நல்லது. துணி, பஞ்சு இவைகளில் திரி செய்து தீபம் ஏற்றலாம். தீப வழிபாடு ஞான சக்தியை அதிகரிக்க செய்யும். மூலவருக்கு தீபம் காட்டும் போது கண்ணுக்கு நேரில் காட்ட வேண்டும். தீப முத்திரை காட்டிய பிறகு மணி அடித்து மந்திரங்கள் சொல்லியபடி மூலவரின் கிரீடம் முதல் பாதம் வரை காட்டப்படுதல் வேண்டும்.

**13.நைவேத்தியம்:**

சுத்த அன்னம், பாயாசம், பொங்கல் ஆகியவை சுவாமிக்கு நைவேத்தியமாக படைக்க ஏற்றவையாகும். மனிதர்களின் சராசரி குணமாகிய ஆசை, கோபம், மோகம் போன்றவைகளை நாம் அன்னமாக வேக வைத்து இறைவனுக்கு சமர்ப்பிப்பதையே இது காட்டுகிறது.

இறைவனின் 5 முகங்களில் சத்யோஜாதம் முகத்துக்கு எள் அன்னம், வாமதேவத்துக்கு சர்க்கரை அன்னம், அகோரத்துக்கு பாயாசம், தத்புருஷத்துக்கு சுத்த அன்னம், ஈசானத்துக்கு பொங்கல் படைப்பது மிகவும் விசேடமாகும். இது தவிர ஒவ்வொரு ஆலயத்திலும் இறைவனுக்கு பிடித்த நைவேத்தியம் மாறுபடும்.

காய்கறி, உணவு வகைகள், பாயாசம், வடை, இனிப்புகள் படைப்பது பொதுவானதாக உள்ளது. இறைவனுக்கு நாம் நைவேத்தியம் படைப்பதால் உலகில் சுபீட்சம் ஏற்படும்.

**14.பானீயம்:**

இறைவன் குடிக்க சுத்தமான தண்ணீர் கொடுக்க வேண்டும். இது பானீயம் எனப்படும். இதனால் நமது மனதில் உள்ள இவ்வுலக பற்று நீங்கி முக்தி கிடைக்கும் என்பது ஐதீகம்.

**15.ஜெப சமர்ப்பணம்:**

இறைவனின் மூல மந்திரத்தை 108 தடவை சொல்லி அதை ஈஸ்வரனுக்கு சமர்ப்பணம் செய்வதே ஜெப சமர்ப்பணம் என்றழைக்கப்படுகிறது. ஜெபம், பூஜை ஹோமம் ஆகிய எல்லா புண்ணிய செயல்களையும் இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இறைவன் அதை ஏற்றுக் கொண்டு நமக்கு முக்தி தருவார்.

பூஜை முறைகளில் நம்மையும் அறியாமல் ஏற்படும் குற்றம் குறைகளை நிவர்த்தி செய்ய இந்த ஜெப சமர்ப்பணம் உதவுகிறது. ருத்ராட்ச மணி கொண்டு மூல மந்திரம் சொல்லி சம்கிதா மந்திரத்தால் முறைப்படி கவசம் செய்து அர்க்கிய தண்ணீரை ஈசனின் வலக்கையில் சமர்ப்பித்து வழிபட வேண்டும்.

**16.ஆரத்தி:**

மேள, தாளம் முழங்க, மணி அடித்து ஆரத்தி காட்டப்பட வேண்டும். ஆரத்திக்கான தீபத்தில் பூ போட்டு பார்த்தல், தண்ணீர் தெளித்தல், தட்டுதல், மந்திரம் சொல்லி சுற்றுதல் என்ற 4 வகைகளை செய்தல் வேண்டும். இறைவனுக்கு தீபம் காட்டும்போது முகம், கண், மூக்கு, கழுத்து, மார்பு, கால்கள் என வரிசையாக 3 தடவை சுற்றி காட்டுதல் வேண்டும். தீபத்தில் 16 வகை உள்ளது. பூமி, ஆகாயம், சொர்க்கம் ஆகிய மூன்றையும் காக்கவே மூன்று தடவ்வை தீபாரதனை காட்டப்படுகிறது.

இப்படி 16 வகை உபசாரங்கள் ஆகமங்களில் வகுத்து வைக்கப்பட்டிருந்தாலும் பெரும்பாலான ஆலயங்களில் அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, நைவேத்தியம், ஆராதனை, உற்சவம் என்ற அடிப்படையில் 6 வகையான உபசாரங்களே செய்யப்படுகின்றன. இதில் சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்படுவது ஏன், எப்படி, அதனால் ஏற்படும் பலன்கள் என்னென்ன என்பதை அடுத்து விரிவாகக் காணலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 349 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொவிட்-19 பரவலினால் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 349 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

அதன்படி தென்கொரியாவிலிருந்து 275 பேரும் கட்டாரின், டோஹாவிலிருந்து 21 பேரும் ஜப்பானின் நரிட்டோவிலிருந்து 53 பேரும் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களினால் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ)

## மஞ்சள் கடத்தல் 5 இந்தியர்கள் கைது

(புத்தளம்)

புத்தளம் குதிரை முனை கடற்பரப்பில் சட்டவிரோதமாக உலர்ந்த மஞ்சளினை கடத்த முற்பட்ட ஐந்து இந்திய பிரஜைகள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இவர்களிடமிருந்து 1372 கிலோ 300 கிராம் உலர்ந்த மஞ்சளும் கைப்பற்றப்பட்டது.

குதிரைமலை முனையையொட்டிய இலங்கைக் கடற்பரப்புக்குள் அண்மையில் உள்ள சர்வதேச கடற்பரப்பு எல்லையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இந்திய மீன்பிடிப் படகு ஒன்றை அவதானித்த இலங்கை கடற்படையினர் குறித்த பகுதியை நோக்கி விரைந்தனர்.

இதன்போது, குறித்த மீன்பிடிப் படகில் உலர்ந்த மஞ்சளை கொண்ட 39 பொதிகள் கைப்பற்றப்பட்டதுடன் 5 இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.


மேலதிக விசாரணைகளுக்காக மஞ்சளைக்கைப்பற்றிய கடற்படையினர், கைது செய்யப்பட்ட 5 இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக மீண்டும் இந்திய கடற்பரப்பிற்குள் அனுப்பி வைத்தனர். (ஐ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 400 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 280 | 200 |
| தக்காளி | 160 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 80 | 50 |
| கோவா | 50 | 80 | 80 | 100 |
| கரட் | 140 | 100 | 200 | 240 |
| பூசணி | 80 | 60 | 70 | 80 |
| புடோல் | 80 | 70 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 200 | 300-340 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 80 | 160 | 180 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 250 | 380 | 300 | 300 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 300 | 320 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 240 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்பள்ளை | 250 | 300 | 300 | 280 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 70 | 60 |
| தேசிக்காய் | 200 | 100 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 120 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 120 |




# வெங்காய வியாபாரி



ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான்.

தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாய் ஒரு இண்டர்வியூ. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈமெயில் முகவரி கேட்டார்கள்.

'ஈ மெயிலா? எனக்கு ஈ மெயில் இண்டர்நெட் டெல்லாம் தெரியாதே' என்றான் துடைக்க வந்தவன்.

'கம்ப் யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்பு கிறவனுக்கு ஈமெயில் முகவரி இல்லையா? ச்சே!' என்று அவனை அனுப்பி விட்டார்கள்.

வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில் 10 டொலர்கள் இருந்தன. அதைக் கொண்டு மார்க்கெட்டில் வெங்காயம் வாங்கினான்.

பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான் 10 டொலர் லாபம் கிடைத்தது. மீண்டும் வெங்காயம் மீண்டும் விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங்களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டார்.

இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்கு திறப்பு சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவரிடம் பேச வந்திருந்தார். அவனுடைய ஈமெயில் முகவரி கேட்டார்.

வியாபாரி, 'ஈமெயில் முகவரி இல்லை' என்று பதிலளிக்க, 'ஈமெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா..? உங்களுக்கு மட்டும் ஈமெயில், இண்டர்நெட்டெல்லாம் தெரிந்திருந்தால்?' என்று ஆச்சரியமாய்க் கேட்டார் வங்கி ஊழியர்.

'அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன்' என்றார் வியாபாரி...!

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## மாண்புமிகு மாசிடோனியா




கவிதைக்கு அதிக முக்கியத்துவம் இசைக்குத்தான். குழல் கருவிகள், நரம்புக் கருவிகள் மூலம் இசை எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தப் பயன்படுத்தப்படும்.

அவ்வப்போது இசைக்கச்சேரிகள் நடத்தப்படும். ஏராளமான கிரேக்கர்கள் இசையை முழுநேரத் தொழிலாகவும் எடுத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர்.

கிரேக்கர்களுடைய நடை, உடை, பாவனை எல்லாவற்றிலுமே ஒரு வித நளினம், மிடுக்கு காணப்படும். இருபுறமும் கைகால்களைக் கன்னாபின்னாவென்று அசைத்துக்கொண்டு நடப்பது கிரேக்கர்களால் அருவருப்பாகப் பார்க்கப்படும் விடயம்.

எதைச் செய்தாலும் அதில் அழகுணர்வு இருக்கவேண்டும். என்பது கிரேக்கர்களின் இரத்தத்தோடு கலந்துவிட்ட விடயம்.

காய்கறி நறுக்குவது, பாத்திரங்கள் அடுக்கி வைப்பது, துணிமணிகளைத் துவைத்து உலர்த்துவது என்று எல்லா விடயங்களிலும் நேர்த்தி இருக்கும்.

அவர்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு பாத்திரமும் அழகிய சித்திரங்கள் வரையப்பட்டு மெருகேற்றப்பட்டிருக்கும்.

சுத்தம், சுகாதாரம் போன்றவற்றில் அதிக சிரத்தை எடுக்கக்கூடியவர்களாக இருந்தனர். தன்னுடைய வீடு தவிர்த்த மற்ற இடங்களும் கூட சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தனர்.

கிரேக்கர்களின் காலை உணவு ரொட்டியும் மதுவும். நேர்த்தியாக உடையணிந்துகொண்டு தான் வெளியே புறப்படுவார்கள். ஒவ்வொருவர் பின்னாலும் ஒன்று அல்லது இரண்டு அடிமைகள் நடந்து வருவார்கள்.

தினமும் காலை நேரத்தில் தாடி, மீசையை மழித்துக்கொள்வது கிரேக்கர்களின் வழக்கம். அதன்பிறகு சந்தைக்குச் (Agora) சென்று வீட்டுக்குத் தேவையான காய்கறிகள், மளிகைச் சாமான்கள் ஆகியவற்றை வாங்கி தன்னுடன் வந்த அடிமைகளிடம் வீட்டுக்குக் கொடுத்தனுப்புவார்கள்.

அதன்பிறகு தங்களுடைய தொழிலை கவனிக்கத் தொடங்கி விடுவார்கள். பகல் உணவு முடிந்ததும் சிறிது நேரம் ஓய்வு.

குட்டித்தூக்கம். பிறகு மீண்டும் வேலை. அடுத்தது உடற்பயிற்சி, கால்பந்து, கூடைப்பந்து, ஓட்டம் போன்ற விளையாட்டுக்கள். அதன்பிறகு ஒலிவ் எண்ணெய் குளியல். பிறகு சாப்பாடு.

(தொடரும்)

உங்கள் மனதில் பயம் என்னும் கதவு அடைக்க வருகிறதா? நம்பிக்கையுடன் இறைவனைப் பிரார்த்தனை செய்யுங்கள். நல்ல கதவு திறந்து மனதிற்கு நல்ல வழி தெரிய ஆரம்பிக்கும். – ஜோசப் மர்பி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசாங்கத்துடன் ஒத்திசைப்பதுதான் தம் கடன் என்று நினைப்பதோ!

அரசாங்கத்தை ஆதரிக்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உளர்.

அதிலும் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்திலும் அரசாங்கத்தை ஆதரிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புகளும் அபிவிருத்திப் பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

சரி வடக்கு–கிழக்கில் அரச தரப்புச் சார்ந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனரெனில்,

அவர்களுக்கு வாக்களித்தது யார்? என்று கேட்டால், தமிழ் மக்களே வாக்களித்தனர் என்பதுதான் பதில்.

எனினும் இங்கு முக்கியமான ஒரு விடயத்தை நாம் கவனிக்க வேண்டும்.

அதாவது அரசாங்கத்தை ஆதரிக்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களின் சிந்தனை எவ்வாறாக இருந்ததென்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது அரசாங்கத்தை ஆதரிக்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரைத் தெரிவு செய்வதன் ஊடாக, அவர்கள் அரசாங்கத்துடன் கதைத்துப் பேசி தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை எடுத்துக்கூறி அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்ற நல்ல நோக்கோடு தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களித்திருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குகின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்க்ளின் உரிமைக்கான கோரிக்கைகளை எதிர்ப்பதையும் நினைவேந்தல்களை தூற்றுவதையும் எந்தளவுக்கு உச்சமாகச் செய்ய முடியுமோ அந்தளவுக்கு அதனைச் செய்து அரசாங்கத்துக்கு தங்கள் விசுவாசத்தைக் காட்டுகின்றனர்.

ஆனால் இத்தகைய இயல்புகளை ஆளுந்தரப்பினர் கூட விசுவாசமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதுதான் உண்மை.

இங்கு ஒரு விடயத்தைக் கூறியாக வேண்டும். அதாவது ஆளுந் தரப்புக்கு ஆதரவாக இருக்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவராலும் கார்த்திகை விளக்கீட்டின் மகிமை பற்றி அரசாங்கத்துக்கு எடுத்துரைக்க முடியவில்லை.

கார்த்திகை விளக்கீடு சைவ மக்களின் முக்கியமான வழிபாட்டு நாள் என்பதை எடுத்துரைத்து கார்த்திகை விளக்கீடு எந்த தடைகளுமின்றி நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

இதைக்கூட அவர்களால் செய்ய முடியவில்லை எனும்போது, அவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துப்பாடுவதையே தங்கள் கடனாக எண்ணுகின்றனர் என்றே கருத வேண்டியுள்ளது.

எனவே இனிமேலாவது, ஆளுந்தரப்பை ஆதரிக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களை, அடிப்படைப் பிரச்சினைகளை அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறி, உரிய பரிகாரத்தை தேடுகின்ற பணியைச் செய்தாக வேண்டும்.

# வீட்டுத் திட்டக் கொடுப்பனவு நிறுத்தம்
## மக்கள் பெரும் சிரமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த ஆட்சியின் போது வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் முழுமையாக இதுவரை வழங்கப்படாமையினால் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தமக்கான வீடுகளை முழுமைப்படுத்தமுடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2018ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் வீட்டுத் திட்டங்கள் கிடைக்கப்பெறாத குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறான குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு வீட்டுத் திட்ட பயனாளிகள் தமக்கான வீடுகளுக்குரிய கட்டுமானப் பணிகளை தொடங்கிய நிலையில் அவற்றை இடைநடுவில் கைவிட்டுள்ளனர்.

இதேவேளை ஒரு சில பயனாளிகள் வங்கிகளிலும் தனியார் நிறுவனங்களிடமும் கடன்களை பெற்று வீடுகளுக்கான கட்டுமான பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறான பயனாளிகள் தமதுவீடுகளை கட்டி முடிக்க முடியாமலும் வீட்டுக்காக பெற்ற கடன்களை செலுத்த முடியாமலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.(ஜ-315)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 02 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** சுன்னாகம் சிவன் கோவிலிலிருந்து கொத்தியாவத்தை மயானம் வரை, சுன்னாகம் மலப்பை, சூராவத்தை, ஏழாலை, குப்பிழான், கட்டுவன், சுன்னாகம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குளுமாட்டு சந்தி, புளிதறித்தபுளியங்குளம், செக்கட்டிபிலவு, செல்வநகர் கிராமம், புதியசின்னக்குளம் கிராமம், நித்திய நகர், மணியர்குளம், எருக்கலங்கல், நித்தியநகர், றங்கீத்கம, வாரிக்குட்டியூர், சங்கரபுரம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** நீலாமடுவிலிருந்து சிலாவத்துறையூடாக அரிப்பு மற்றும் முள்ளிக் குளம் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# வலி.வடக்கு பட்ஜெட் நிறைவேற்றம்

(குப்பிழான்)

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 27 மேலதிக வாக்குகளால் நேற்றுத் திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விசேட கூட்டம் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தவிசாளரால் சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. சபையில் தற்போது அங்கம் வகிக்கும் 37 உறுப்பினர்களில் மூன்று உறுப்பினர்கள் மேற்படி விசேட கூட்டத்திற்கு வருகை தரவில்லை.

இந்நிலையில் சபைக்கு வருகை தந்த 34 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள் என சபையின் 30 உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராகவும் வாக்களித்தனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் நடுநிலைமை வகித்தார். இதன் மூலம் வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (5,18,33)

16
2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு
16 Days of Activism Against Gender Based Violence- 2020
JSAC
துயருறும் பெண்ணுக்காய் துயர் தீர்க்கும் கரங்களாய் இணைவோம்
சுமைகளை வழங்கி சுமைதாங்கிகளாக
மட்டும் மாற்றாமல் கல்விதனை வழங்கி
தன்னம்பிக்கையான சமுதாயத்தை உருவாக்குவோம்
யாழ்.சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center
ஊடக அனுசரணை: வலம்புரி

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தவறுகளையும் வாழ்த்துங்கள்

❖ அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

❖ மகத்தான செயல்களைச் செய்யவே இறைவன் நம்மைத் தேர்வு செய்கிறான். அவற்றைச் செய்து முடிப்போம் என்று உறுதியெடுங்கள்.

❖ பசியால் நலிந்து வாழும் மக்களிடையே சென்று சமயப்பிரசாரமும், தத்துவ போதனையும் செய்வது அவர்களை அவமதிப்பதாகும்.

❖ மிருக, மனித, தெய்வீக இயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். உன்னிடமுள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக்கூடியது தான் நல்லொழுக்கம். மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வது தீய ஒழுக்கம்.

❖ நீ செய்த தவறுகளை வாழ்த்து, அந்தத் தவறுகள் நீ அறியாமலேயே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

❖ வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும், அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருக்க வேண்டும். அந்தக் குணங்கள் தாம், அவர் வாழ்க்கையில் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணங்களாகும்.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021




**சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்கு கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

1) அடுத்த மூன்று ஆண்டுகளில் சகலருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் அரசாங்கத்தின் இலக்குக்கு இணங்கியதாக சமூக குடிநீர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர் வளங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் இணைந்து சுமார் 450,000 வீடுகளுக்கு 2021 இல் குழாய் நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்காக ரூபா 5,000 மில்லியன் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

2) பெரும்பாலும் அனைத்துக் கிராமங்களையும் உள்ளடக்கியதாக 100,000 கிலோமீற்றர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 50,000 கிலோமீற்றர் கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கு ரூபா 20,000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

3) 12,000 கிராமப்புற கிராமங்களை வெளிச் சூழலுடன் இணைப்பதற்கு வசதியளிப்பதற்கு சிறிய வாகனங்களுக்கு செல்லக்கூடிய அணுகுகையினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள 10,000 கிராமப்புற பாலம் நிகழ்ச்சித் திட்டத்தை விரைவு படுத்துவதற்கு ரூபா 7,000 மில்லியனை நாம் ஒதுக்குவோம்.

4) பிரதேச செயலக மட்டத்தில் 1000 தேசிய பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள அந்தக் கிராமிய பாடசாலைகளுக்குத்தேவையான ஆசிரியர்களையும் அடிப்படை வசதிகளையும் வழங்குவதற்கும் ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்படும்.

5) கிராமிய வைத்தியசாலைகள், மருந்தகம் மற்றும் மகப்பேற்று சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ரூ.5,000 மில்லியன் ஒதுக்குதல்.

6) கிராமியப் பாடசாலை விளையாட்டு மைதானங்களையும் கிராமிய விளையாட்டு சங்கங்களையும் அபிவிருத்தி செய்தல், பாடசாலை சிறுவர்களை விளையாட்டிற்கு ஊக்குவித்தல், கைப்பந்து போன்ற பிராந்திய விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டுகளில் பெண்களின் பங்குபற்றுதலை ஊக்குவிப்பதற்காக அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ரூபா 3,000 மில்லியன் மேலதிக ஒதுக்கீட்டை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

7) 200,000 சமுர்த்தி பெறுநர் குடும்பங்களை மையமாகக் கொண்டு வீட்டுப் பொருளாதாரங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவும் பொருட்டு அவர்கள் வாழும் கிராமங்களுக்கு அதிகாரம் வழங்கவும் ரூபா 10,000 மில்லியன் ஒதுக்கப்படும்.

8) பாரம்பரிய கைத்தொழில்களை கையாளும் கிராமங்களிலுள்ள விசேட அம்சங்களைக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு ரூபா 2,000 மில்லியனை ஒதுக்குதல்.

9) யானை வேலி மற்றும் அகழிகளைத் தயாரித்தல், மனிதனுக்கு யானை மோதலின் மூலம் ஏற்படும் உயிர் மற்றும் சொத்துக்களுக்கான சேதங்களைத் தடுப்பதன் மூலம், மக்களைப் பாதுகாப்பதற்கு அந்தப் பகுதிகளில் உள்ள சமூகங்களின் பங்களிப்புடன் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வலுவூட்டுவதற்காக காட்டுப் பகுதிகள், குளங்கள் மற்றும் ஆறுகளில் உள்ள விலங்குகளின் உணவுத் தேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்குங்கள்,

10) சரணாலயங்கள் மற்றும் யானை வாழும் பகுதிகளை அவற்றின் இடம்பெயர்வு முறைகளுக்கு இடையூறு செய்யாமல் பாதுகாத்தல்.

11) விலங்குகளின் அச்சுறுத்தலுக்கு ஆளாகக்கூடிய பகுதிகளில் உள்ள விவசாய அமைப்புகளுக்கு அவற்றின் தானியங்களைப் பாதுகாக்கப்பட்ட முறையில் வைத்திருக்கவும் கொள்கலன்களை வழங்குதல்.

12) வனவிலங்கு பகுதிகளுக்கு அருகிலுள்ள கிராம எல்லைகளுக்கு குப்பைகளை கொட்டுவதன் காரணமாக காட்டு யானைகளை கிராமங்களுக்கு ஈர்க்காதிருக்கும்.

## துறைமுக நகர பொருளாதார வலயம்

துறைமுக நகர பொருளாதார வலயத்தை கவர்ச்சிகரமான வியாபார மையமாக விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நிதி மற்றும் வர்த்தக மையத்தை தாபிப்பது இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையத்தின் முதல் கட்டம் 2021 ஆம் ஆண்டில் வணிக நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் துறைமுக நகர பொருளாதார வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான புதிய சட்ட கட்டமைப்பை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நான் எதிர்பார்க்கிறேன். இது நம் நாட்டில் முதலீட்டு ஊக்குவிப்பின் முக்கியமான மையப்புள்ளியாகும், இது மூலோபாய அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வரிச் சலுகைகளையும் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏற்றுமதிக் காப்புறுதி

ஏற்றுமதிகளின் பெறுகை உறுதிப்படுத்தலினூடாக நிதியளிப்பு வசதிகளை துரிதப்படுத்துவதற்கு ஏற்றுமதி வருமானத்தில் 1 சதவீத காப்புறுதி தவணைக் கட்டணத்தை பங்களிப்பாகப் பெற்று இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தினால் காப்புறுதித் திட்டமொன்றினைச் செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## குளங்கள் புனரமைப்பு

சிறிய மற்றும் நடுத்தரளவிலான குளங்களின் புனரமைப்பு பெரும்போக அறுவடையின் பின்னர் 11 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும். இந் நோக்கத்திற்காக ரூபா 600 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சுற்றாடல்

சுற்றாடல் உணர் திறன் முறையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் பொருட்டு 2021 ஜனவரி 01 முதல் ஒற்றைப் பயன்பாட்டு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாட்டை தடை செய்வதற்கு நான் முன்மொழிகிறேன். சகல பிளாஸ்ரிக் உற்பத்திக்கும் கண்ணாடிப் பொருட்கள், சுற்றுச்சூழல் நட்பான சுகாதார பொருட்கள் மற்றும் இழிவுபடுத்தக் கூடிய பொருட்கள் ஆகியவற்றிற்காக மீள் சுழற்சி செய்வது கட்டாயமாக்கப்படும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி யாளர்களுக்கு கடன்களை வழங்குதல் (கடன் உத்தரவாத திட்டம்)

## முடிவுரை

இந்த வரவு-செலவுத் திட்டமானது வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அபிவிருத்தி வரவு-செலவுத் திட்டமாகும். அது "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை யதார்த்தமாக மாற்றி பேரண்டப் பொருளாதார நோக்கில் சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டமாகும்.

உலகளாவிய பொருளாதாரத்தில் போட்டிக்குரிய உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவை உற்பத்திக்காக எமது வியாபார சமூகத்திற்கு வழங்கப்பட்ட விசேட முதலீட்டு வாய்ப்புகள் பலவற்றை திறக்கின்ற வரவு-செலவுத்திட்டமாகும். உள்நாட்டு பொருளாதாரத்தை போட்டிக்குரியதாக உலகளாவிய பொருளாதாரத்திற்கு பிரவேசிப்பதற்காக அடுத்த 3 ஆண்டுகளுக்குள் எமது நாட்டிலுள்ள சகல தரத்தையும் சேர்ந்த உற்பத்தியாளர்களை இதற்காக அர்ப்பணிப்பைச் செய்தல் வேண்டும். அரசாங்க சேவையை அதற்கு ஊக்குவித்தல் வேண்டும்.

வரி அல்லது செலாவணி கட்டுப்பாட்டு சட்டங்களிலிருந்து மீளுவதற்காக உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ மறைத்து வைத்திருக்கின்ற பணத்தை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துமாறு அந்த வர்த்தகர்களிடமும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தினூடாகச் செய்யப்பட்டுள்ள எந்தவொரு முதலீட்டுக்கும் அவ்வாறு பணத்தை பயன்படுத்துகின்ற வர்த்தகர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சத்தியக் கடதாசியொன்றுடன் நூற்றுக்கு ஒரு வீத வரியைச் செலுத்துவதற்கு உட்பட்டு .வரி விடுவிப்பை வழங்குவதற்கும் சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றேன்.

2021 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட அரசாங்கத்தின் வருமானம் ரூபா 1,886 பில்லியனாகும். அரசாங்கத்தின் மொத்தச் செலவு ரூபா 3,441 பில்லியனாக இருக்கின்றபடியினால் வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான இடைவெளி ரூபா 1,555 பில்லியனாகும்.

2014 தேசிய வருமானத்தில் 32.3 சதவீதமாகக் காணப்பட்ட தனியார் முதலீடு 2019 இல் 27.6 சதவீதமாக குறைவடைந்திருப்பது. தடைப்பட்டிருந்த நாட்டின் அபிவிருத்தி வேகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் வலுவான ஆரம்பத்தை வழங்க வேண்டியதனாலும் 2021 இல் தேசிய வருமானத்தி லிருந்து 9 சதவீதத்திற்கு சற்றுக் குறைவான வரவு-செலவுப் பற்றாக் குறையை எடுத்துக் காட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொடுப்பனவுகளில் காலாவதியான கடனை நீண்டகால கடனாக மீண்டும் வழங்குவதற்கு உள்ள வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளபடியினால் இந்த வரவு-செலவு இடைவெளியை முகாமை செய்ய முடியுமென்பது எனது நம்பிக்கையாகும்.

மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படும் பொருளாதார கொள்ளளவுப் பயன்பாட்டை அதிகரித்துக் கொள்வது இந்த வரவு-செலவுத்திட்டதின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கிராமிய அதே போன்று நாட்டின் பாரம்பரிய தொழில்நுட்ப ரீதியிலும் நுண்நிதி போன்ற மூலதனச் சந்தை ரீதியிலும் ஒன்றுக்கொன்று பொருந்துகின்ற அபிவிருத்தி முன்மொழிவுகளின் மூலம் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

2021 இல் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி 5.5 சதவீதமாக உள்ள அதே வேளையில் அதனை 6 சதவீத வளர்ச்சி வீதத்திற்கு இட்டுச் செல்வதுடன் அரசாங்க வருமான வளர்ச்சியை தற்போது காணப்படுகின்ற 9.7 சதவீதத்திலிருந்து 14.1 சதவீதம் வரை அதிகரிப்பது எமது வரவு-செலவுத்திட்ட இடைவெளியைக் குறைக்கும் நடுத்தரகால நோக்கு என்பதனை வலியுறுத்துகிறேன்.

2025 அளவில் வரவு-செலவுப் பற்றாக்குறையை 4 சதவீதத்திற்கு இலக்கிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியினூடாக விரிவுபடுத்துகின்ற வரி வருமான வளர்ச்சி, அரசாங்க செலவினம் மற்றும் அரசாங்க தொழில் முயற்சி முகாமைத்துவம் ஆகியவற்றில் அதிகளவு நம்பிக்கை வைத்துள்ளமையினாலாகும். பொருளாதார புத்துயிரளித்தல் வறுமையை ஒழிக்கும் அபிவிருத்தி வரவு-செலவுத்திட்டத்திற்கு உங்கள் அனைவரினதும் ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கின்றேன்.

**மும்மணிகளின் ஆசிகள் உரித்தாகட்டும்.!**

(முற்றும்)

## பாம்பு தீண்டியதில்...

யதில் உயிரிழந்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வேலியம்தோட்டம், உடுப்பிட்டி வடக்கு பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மகேசன் தவம் (வயது - 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுத் திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் பாம்பு தீண்டி மரணம் இடம்பெற்றதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3.60)

## விளையாட்டாக...

கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்ட சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சிறுமி விளையாட்டாக தனது தமையனின் கழுத்துப் பட்டியை யன்னலில் கட்டி இவ்வாறு கழுத்தில் சுருக்கிட்டுள்ளார் என்று திடீர் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பருத்தித்துறை, புலோலி, சாரையடியைச் சேர்ந்த ஹம்சா சிறிதரன் (வயது-9) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

தாயாரும் தமையனும் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த நிலையில் வீட்டில் தனிமையில் இருந்த சிறுமி, தமையனின் கழுத்துப் பட்டியை எடுத்து அவரது உயர மட்டத்தில் காணப்பட்ட யன்னல் பிணைச்சலில் கட்டி கழுத்தில் சுருக்கிட்டுள்ளார். சுருக்கு இறுகியதால் சிறுமி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவராஜா விசாரணைகளை முன்னெடுத்தார். (ம-3.60)

## காணாமல்போன...

செல்லப்பட்ட இரண்டாவது நபரின் சடலமும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாசிலாமணி தவச்செல்வம் (வயது 19) என்ற இளம் குடும்பஸ்தரின் சடலமே நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இருவரது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று சடலமாக மீட்கப்பட்ட குறித்த இளைஞனுக்கு 10 நாட்களுக்கு முன்னர் தான் திருமணம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழ்.பல்கலைக்...

களின் அடிப்படையில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொற்று உறுதி செய்யப்பட்ட நபர் காங்கேசன்துறை கடற்படை முகாமைச் சேர்ந்தவர் எனவும் ஏனைய 71 பேருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஒருவருக்கு...

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த நாதகம்பி நவீனநாயகம் என்பவரே தலையில் வெட்டுக் காயத்திற்குட்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உறவினருடன் ஏற்பட்ட முரண்பாட்டிலேயே வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-3.60)

## சொக்கப்பனை...

கார்த்திகை விளக்கீட்டின்போது தனிமைப்படுத்தல் விதிகளை மீறி, வழிபாட்டில் ஈடுபட்டதனால் சுகாதார அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

காரைநகர் களபூமி திக்கரை முருகன் ஆலயமே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. வழிபாட்டில் ஈடுபட்ட சுமார் 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒருவர் அண்மையில் காரைநகரில் உள்ள வீட்டிற்கு திரும்பியிருந்தார். அவர் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் குறிப்பிட்ட நபரின் தாயார் இரண்டு தினங்களுக்கு முன்னர் திக்கரை முருகன் ஆலயத்திற்கு வழிபாட்டிற்கு வந்து சென்றிருந்தார்.

இதையடுத்து திக்கரை முருகன் ஆலயத்தை சுகாதார பரிசோதகர் தனிமைப்படுத்தியிருந்தார். இதை மீறி நேற்று முன்தினம் கார்த்திகை விளக்கீட்டில் சொக்கப்பனை எரிப்பு நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்றது.

சுமார் 30 பேர் இதில் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். (ம-3)

## ஆபத்து வலய...

பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவிவரும் நிலையில் தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றுவதை உறுதி செய்ய சுகாதார அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு படையினர் அக்கரைப்பற்றில் நிறுத்தப்படவுள்ளனர். (ம-3)

## வடக்குக்கு...

நாளை, நாளை மறுதினம் இடிமின்னல் நிகழ்வுகளுக்கும் வாய்ப்புண்டு. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் கடற்பகுதிகளில் அலைகளின் உயரம் வழமையைவிட உயர்வாக காணப்படும்.

இதேவேளை 2ஆம், 3ஆம் திகதிகளில் வட மாகாணம் உள்ளிட்ட 5 மாகாணங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம-3)

## கொரோனா...

நாட்டில் நேற்று திங்கட்கிழமை கோவிட் - 19 நோயாளிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 118ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், நேற்று 492 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 23 ஆயிரத்து 987 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## வட...

வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 பேரும் மன்னார் மாவட்டத்தில் 4 பேரும் முல்லைத்தீவில் 2 பேருமாக மொத்தமாக நவம்பர் மாதத்தில் 27 பேர் வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்கள் என இனங்காணப்பட்டுள்ளார்கள்.

நவம்பர் மாதத்தில் வடக்கு மாகாணத்தில் 7682 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களில் 27 பேருக்கு கொரோனா தொற்றென இனங் காணப்பட்டுள்ளார்கள் என்றார். (ம-3)

## இளைஞன்...

கட்டப்பட்ட நிலையில் நேற்று வல்லிபுரக் கோவில் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார்.

இரு நாட்களுக்கு முன் காணாமல் போயிருந்த கிருஷ்ணபிள்ளை பிரதீபன் (வயது-24) என்ற இளைஞனே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

வல்லிபுரக் கோவில் வீதிப் பகுதியில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அவரை அவதானித்த நபர் ஒருவர் அவசர நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்து அவரை பருத்தித்துறை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்திருப்பதாக தெரியவருகிறது. (ம-3.60)

## சாதாரண தர...

தீர்மானம் இரு நாட்களுக்குள் எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதம் பரீட்சை நடத்த முடியாமல் போனால் மாணவர்கள் பரீட்சைக்கு தயாராக மேலதிகமாக 6 வார காலம் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

கொவிசெத — சீட்டிழுப்பு திகதி 30.11.2020 — சீட்டிழுப்பு இலக்கம் 2617 — A 6 21 37 45
மஹஜன சம்பத — திகதி 2020/11/30 — சீட்டிழுப்பு இலக்கம் 4322 — A 2 9 0 1 2 0
தன நிதானய — திகதி - 30/11/2020 — சீட்டிழுப்பு இலக்கம் - 359 — E 20 27 45 59 — 2 3 0 1
மெகா பவர் — திகதி 30/11/2020 — சீட்டிழுப்பு இலக்கம் 0689 — S 07 42 55 74 80
வாசனா சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1634 — திகதி 2020/11/30 — Q 10 23 50 68
அத கோடிபதி — தினம்: திங்கள் — சீட்டிழுப்பு இல: 1118 — வர்ணம்: சிவப்பு — சீட்டிழுப்பு திகதி: 30.11.2020 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 87,350,495 — வெற்றி இலக்கங்கள் 09 19 48 59 E
சனிதா — தினம்: திங்கட்கிழமை — சீட்டிழுப்பு இல: 3448 — வர்ணம்: கரும்பிரவுண் — சீட்டிழுப்பு திகதி: 30.11.2020 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,088,659 — வெற்றி இலக்கங்கள் 30 39 50 65 U
ராசி — சுப்பர் ஜக்பொட் 42,32,534/= — திகதி: 30.11.2020 — வெற்றி வாரம்: 2999 — வர்ணம்: மஞ்சள் — வெற்றி இலக்கங்கள் 04 06 20 37 — மகரம் — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,411,000
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1292 — நிறம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 30/11/2020 — தினம் திங்கள் — வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 16 53 62 74 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை 32,82,720
ஜயோதா — சீட்டிழுப்பு வாரம் 1711 — சீட்டிழுப்பு திகதி 30/11/2020 — வெற்றி இலக்கங்கள் 36 40 56 61 E — எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 56,467,712 — தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

# கோவிட் - 19 தடுப்புக்கு தனியான இராஜாங்க அமைச்சர்

## ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

மருத்துவர் சுதரசனி பெர்னாண்டோ புள்ளை, ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கோவிட் -19 நோய் தடுப்பு இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் இந்த நியமனம் நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

சுதர்சனி பெர்னாண்டோபுள்ளை புதிய அரசில் இன்றுவரை சிறைச்சாலை சீர்திருத்தங்கள் மற்றும் கைதிகள் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சராகப் பணியாற்றினார்.

அவரது பழைய இராஜாங்க அமைச்சு பதவி தொடர்பில் அறிவிக்கப்படவில்லை.

இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளை சமுதாய மருத்துவ வல்லுநர் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-03)


### சிறுநீரகம் தேவை

உரும்பிராய் தெற்கு, யோகபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட 25 வயதுடைய ஆண் ஒருவருக்கு 0+, A+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (C-799)

076 314 5365
077 212 8063

### காணிகள் தேவை

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேச செயலக எல்லைகளுக்குள் 20 பரப்பு தொடக்கம் 50 பரப்பு வரையான காணி தேவை. (4774)

( தரகர் தேவையில்லை. )

076 221 2037

### வீடு வாடகைக்கு

ஓட்டுமடத்தில் நிறுவனங்களுக்கு உகந்த சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு (C-806)

076 315 6470


# மீன்பிடி வலையில் சிக்கிய 8 கடல் ஆமைகள் விடுவிப்பு

(மன்னார்)

மன்னார் கடற்பிராந்தியத்தில் மீன்பிடி வலையில் சிக்கியுள்ள 08 கடல் ஆமைகளை கடந்த சனிக்கிழமை மாலை கடற்படையினர் மீட்டு கடலில் விடுவித்துள்ளனர்.

மன்னாருக்கு தெற்கே கடலில் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படை மீன் வலையில் கடல் ஆமைகள் சிக்கி இருப்பதை அவதானித்தனர்.

இதன் போது குறித்த ஆமைகளை மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது வலையில் சிக்கிய நிலையில் காணப்பட்ட 8 கடல் ஆமைகள் இவ்வாறு வலையில் இருந்து மீட்கப்பட்டு மீண்டும் கடலில் விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-03,285)

# 13 வயது சிறுவர் இருவருக்கு கட்டாயமாக கசிப்பு பருக்கல்

## முல்லையில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிப்பு பகுதியில் 13 வயதுடைய இரண்டு சிறுவர்களுக்கு வலுக்கட்டாயமாக கசிப்பு பருக்கப்பட்ட நிலையில் சிறுவர்கள் இருவரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி அதிகளவான போதைப் பொருள் ஊட்டப்பட்டமையினால் இரண்டு சிறுவர்களும் சுயநினைவற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வலுக்கட்டாயமாக சிறுவர்களுக்கு கசிப்பு பருக்கியமை தொடர்பாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் இரண்டு சிறுவர்களுடைய பெற்றோர் முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

இதேவேளை பொலிஸாரின் விசாரணையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-03,281)


### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025/=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை


(C-735)


# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் பத்மநாதன்

( ஓய்வுபெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியரும் பலாலி ஆசிரியர் கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளரும் )

மலர்வு : 26.11.1937 உதிர்வு : 30.11.2020



வசாவிளானை பிறப்பிடமாகவும் உடுவில் பிரதேச செயலக வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பத்மநாதன் நேற்று (30.11.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சாவித்திரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முன்னைநாள் சுகாதார போதனாசிரியரும் பாடநூல் எழுத்தாளருமான தர்மலிங்கம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயராணியின் அன்புக் கணவரும் ரஜனி, கரிகரன், காலஞ்சென்ற மயூரன் (பாவாணன்/கெனடி) மற்றும் லிங்கரன், சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் டேவிட், பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிலிசியா, டிலோரன்ஸ், ஜொஹனி, வலன்சியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சத்தியநாதன் மற்றும் மகேஸ்வரி, ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, நிர்மலேஸ்வரி, ஜெகநாதன், யோகேஸ்வரி, வித்தியேஸ்வரி காலஞ்சென்றவர்களான தற்பரநாதன், சுரேந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி இந்திராணி மற்றும் லோகராணி, யோகராணி, சண்முகதாசன் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் ), யுகேந்திரராசா, நந்தகுமாரன் (ஆசிரியர் - சென்ஜோன்ஸ் கல்லூரி ), காலஞ்சென்றவர்களான சிறீஸ்கந்தராஜா, தயாபரன், முரளிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2020) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உடுவில் பிரதேச செயலக வீதி,
சுன்னாகம். (4809)

மனைவி - விஜயராணி : 076 104 3118, 077 293 0212
மைத்துனர் - த. நந்தகுமாரன் : 077 129 8159

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.